REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2022 மே 21 சனிக்கிழமை


# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 118 | Saturday 21, May, 2022 | 12பக்கங்கள்

## 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் 04 ஆவது டோஸ்
### நேற்றிலிருந்து ஆரம்பித்துள்ளதாக அறிவிப்பு

20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொவிட்19 வைரஸ் தடுப்பூசியின் நான்காவது தடுப்பூசியை தடுப்பூசி மையங்களிலிருந்து நேற்று பெற்றுக்கொள்ளுமாறு கொழும்பு பிராந்திய தொற்றுநோய் நிபுணர் டாக்டர் டினு குருகே 06

## ஆகஸ்ட் முதல் இலங்கையில் கடும் உணவு நெருக்கடி நிலை
### முன்னைய அரசு மீது ரணில் குற்றச்சாட்டு



விவசாயத்துக்கான போதிய உரம் இல்லை என்பதே எங்கள் முக்கிய கரிசனையாக உள்ளது. இதனால் எதிர்வரும் பருவகாலத்தில் முழுமையான விளைச்சல் கிடைக்காது போகும். இதன் காரணமாக ஆகஸ்ட் முதல் இலங்கையில் உணவு நெருக்கடிக்கான சாத்தியம் உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனமான ஸ்கைநியூஸுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு இன்று எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு முன்னைய நிர்வாகமே காரணமென சுட்டிக் காட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி 06

### ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முகம் கொடுப்பேன்
## நாட்டுக்காகவே பதவி ஏற்க முடிவு செய்தேன்
### SJB யிலேயே தொடர்ந்தும் இருப்பேன்



நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டே அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஹரீன்,

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தான் ஒரு போதும் விலகப் போவதில்லை. 06

## IMF உடனான பேச்சு மே 24 இல் நிறைவுக்கு
### நாட்டு நிலைமைகள் உன்னிப்பாக கவனிப்பு

இலங்கைக்கான கடன் திட்டம் தொடர்பான தொழில்நுட்ப கலந்துரையாடல்களை எதிர்வரும் 24 ஆம் திகதி நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

காணொளி தொழில்நுட்பமூடாக உரையாடிய அதன் செய்தித் தொடர்பாளர் கேரி ரைஸ் (Gerry Rice), நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் சூழ்நிலையை உன்னிப்பாக கவனித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இலங்கைக்கு உதவ நாங்கள் 06

# சர்வகட்சி அரசின் அமைச்சரவை அமைச்சர்கள் 09 பேர் பதவியேற்பு
### ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் நேற்று சத்தியபிரமாணம்



ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தின் 09 புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் (20) காலை ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதன்படி துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் சிரேஷ்ட அரசியல்வாதியான நிமல் சிறிபால டி சில்வாவும், கல்வி அமைச்சராக கலாநிதி சுசில் பிரேமஜயந்தவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். அதே போன்று சுகாதார அமைச்சராக கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்லவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு, சீர்திருத்த அமைச்சராகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரின் பெர்னாண்டோ, சுற்றுலா மற்றும் காணி 06



சர்வகட்சி அரசாங்கத்தில் விஜயதாச ராஜபக்ஷ நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சராக நேற்று (20) முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போது,....



## இலங்கைக்கு கடன் நிவாரணங்களை வழங்கல்
ஜி–7 நாடுகள் ஒத்துழைக்கும் 03

## எரிபொருள், கேஸ், நீர், மின்சாரம் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கும்
### அதிகரிக்க மத்திய வங்கி பரிந்துரை வழங்கியது



எரிபொருள், மின்சாரம், சமையல் எரிவாயு மற்றும் நீர் கட்டணங்களை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளை நடத்தும் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டம் காரணமாகவே இது போன்ற பரிந்துரையைச் செய்ய வேண்டியுள்ளதென்றும் அவர் கூறினார்.

இலங்கையின் வரி வருமானம் குறைவாக 06

### தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக
## எரியும் நெருப்பில் வைக்கோல் போடும் செயற்பாட்டில் சிலர்
### குறுகிய அரசியல் நோக்கை கைவிட அலி சப்ரி கோரல்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் பொருளாதாரம் உக்கிரமடைந்துள்ளதையடுத்து அனைவரும் இணைந்து பொறுப்புடன் செயற்பட வேண்டுமே தவிர குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எரியும் நெருப்பில் வைக்கோலைப் போட முற்பட வேண்டாம். அரசியல் நோக்கங்களைக் கைவிட்டு அனைவரும் உண்மை நிலையை உணர்ந்து செயற்படுவதற்கு முன்வரவேண்டுமென முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். 06

## Unicef, WFP ஊடாக ஜப்பான் இலங்கைக்கு 03 மில். டொலர் உதவி
### மருந்து மற்றும் உணவு பொருட்களாக வழங்குகிறது



இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களுக்கான பற்றாக்குறையால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஜப்பான் அரசாங்கம் யுனிசெஃப் மற்றும் உலக உணவு திட்டம் ஊடாக இலங்கைக்கு 03 மில்.டொ. பெறுமதியான அவசர மருந்து, உணவு பொருட்களை வழங்க முன்வந்துள்ளது.

யுனிசெப் நிறுவனத்தினூடாக 1.2 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கான மருந்துகளை வாங்குவதற்காக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை 06

### பரீட்சை கடமைகளில் ஈடுபடும்
## உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமையில் எரிபொருள்



க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கடமையிலீடுபடும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களது வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுகொள்வதற்கென ஞாயிறு மாலை 03 மணி தொடக்கம் 05 மணி வரை விசேட இரண்டு மணிநேர முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

## கட்சி சாராத அரசுக்கு EPDP ஆதரவு வழங்கும்
### பிரதமருக்கு டக்ளஸ் MP பதில் கடிதம்

**யாழ்.விசேட நிருபர்**



பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளுக்கு கட்சி சாராத அரசாங்கம், சிறந்த பொறிமுறையாக அமையுமென தெரிவித்துள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, கட்சி சாராத அரசாங்கத்தை அமைக்கும் பிரதமர் விக்ரமசிங்கவின் முயற்சிகளுக்கு ஈ.பி.டி.பி. கட்சி பூரணமான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார். 06

### அரசில் அமைச்சு பதவிகளை பெற்ற
## ஹரீன், மனுஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை
### சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொண்ட உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென எதிர்க்கட்சியின் பிரதம கொரடா 06

## மு.கா தீர்மானத்துக்கு எதிராக ஹாபீஸ் நசீர் மனு தாக்கல்
### உயர் நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பிப்பு



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் மற்றும் உறுப்புரிமை பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதை ஆட்சேபித்து பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நசீர் அஹ்மட் உயர்நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தனவின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் பிரதி, பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



அமைச்சு பதவிகளில் சு.க MPக்கள்;
## கட்சி தீர்மானத்தை மதிக்க தவறியதாக மைத்திரி கவலை
03




ஜூன் மாதம் வரை குறிப்பிட்ட நாட்களில்
## மாலை 6.30 மணிக்கு மேல் மின்வெட்டு இல்லை
03



## மரக்கறி விலைகள் 60 சத வீதத்தினால் அதிகரிப்பு
தக்காளி ஒரு கிலோவின் விலை 700 ரூபாவானது 03

### கொழும்பு – சென்னை
## பயணிகள் விமானத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை



சென்னையில் தரையிறங்கிய இண்டிகோ விமானத்தின் விமானிகள் மீது லேசர் லைட் அடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கொழும்பிலிருந்து சென்னை சென்ற பயணிகள் விமானம் மீதே லேசர்லைட் அடிக்கப்பட்டுள்ளது. 153 பயணிகளுடன் சென்ற இண்டிகோ விமானம் நேற்று அதிகாலை சென்னையில் 06

## வாகனங்களுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகம்
### கேன்கள், போத்தல்களுக்கு வழங்க தடை

லங்கா, ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களின் எரிபொருள் தாங்கிக்கு மட்டுமே நேரடியாக பெற்றோல் விநியோகிக்கப்படுமென லங்கா, ஐஓசி நேற்று (20) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவை லங்கா, ஐஓசி நிறுவனம் பிறப்பித்துள்ளது. 06

## பவித்ரா, கணவர் CIDயில் சுமார் 05 மணிநேர வாக்குமூலம்



பாராளுமன்ற உறுப்பினரான பவித்ரா வன்னியாராச்சி மற்றும் அவரது கணவரான காஞ்சன கருணாரத்ன ஆகியோரிடம் 05 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை குற்றப்புலனாய்வு பிரிவில் ஆஜராகியிருந்தவர்கள் அன்றைய தினம் 06

## பஸ்களுக்கு சேதங்களை விளைவித்தோரிடமிருந்தே நட்ட ஈட்டை பெற முயற்சி



நாட்டின் பல பிரதேசங்களில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தின் போது பஸ்களுக்கு சேதம் விளைவித்தவர்கள் மீது, வழக்குத் தொடரப்பட்டு அவர்களிடமிருந்து நட்ட ஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 06

### விக்கல் வீராச்சாமி



புதிய அமைச்சர்கள் எவருக்கும் சம்பளம் இல்லையெண்டு பிரதமர் தெரிவிச்சிருக்–கிறார், அப்படியெண்டால் யாராவது முன் வருவினமோ....?

நிச்சயம் வருவினம், பதவி வந்தா பத்தும் வரும் எண்டது அவைக்கி நல்லா தெரியும், ஆனா அது இந்தப் பிரதமரோட சரிப்பட்டு வருமோ தெரியாது...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## அரபு எம்.பியின் விலகலால் இஸ்ரேல் அரசில் நெருக்கடி



இஸ்ரேல் அரசில் இருந்து உறுப்பினர் ஒருவர் வெளியேறிய நிலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்திருப்பதோடு எதிர்காலம் பற்றி நிச்சயமற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

கூட்டணி அரசில் இருந்த அரபு உறுப்பினர் ஒருவரே வெளியேறியுள்ளார். சமூகத்தில் தமது பிரிவினரை நோக்கி தமது தலைமைகள் 'வலுதுசாரி நிலைப்பாட்டை' பெற்றிருப்பதை பொறுத்துக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் 120 இடங்களைக் கொண்ட இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி 59 இடங்களை மாத்திரமே பெற்றிருப்பதாக நம்பப்படுகிறது.

இஸ்ரேலிய வரலாற்றில் அதிக பன்முகத்தன்மை கொண்ட கூட்டணியாகவே இந்த அரசு ஓர் ஆண்டுக்கு முன்னர் ஆட்சிக்கு வந்தது. தேசியவாதியான பிரதமர் நப்டாலி பென்னட் தலைமையில் எட்டுக் கட்சிகளைக் கூட்டிணைத்தே தற்போதைய அரசு அமைக்கப்பட்டது. இந்த கட்சிகள் இடையே கொள்கை அளவில் பாரிய பிளவுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின் முதல் முறையாக சுயாதீன அரபு கட்சி ஒன்று இந்த அரசில் உள்ளடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய மக்கள் தொகையில் அரபியர் 20 வீதம் இருப்பதோடு அவர்களுக்கு சட்டத்தில் சம உரிமை வழங்கப்படுவதாக கூறுகின்றபோதும் தாம் பாகுபாட்டுக்கு முகம்கொடுப்பதாக தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் அரசில் இருந்து விலகி இருக்கும் இடதுசாரி மெரெட்ஸ் கட்சியின் கைதா ரினாவி சொவாபி கடிதம் ஒன்றை எழுதி கூறியிருப்பதாவது, 'அரபு சமூகத்திற்கான முக்கிய விடயங்கள் தொடர்பில் கூட்டணி தலைமைகள் கடுமையான மற்றும் வலதுசாரி நிலைப்பாட்டை தொடர்ந்து எடுத்து வருகின்றனர்' என்றார்.

## பின்லாந்து, சுவீடன் நாடுகள் இணைவதில் நேட்டோ உறுதி



பின்லாந்தும் சுவீடனும் விரைவாக நேட்டோ கூட்டணியில் சேரும் என்று நேட்டோவின் தலைவர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பர்க் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவ்விரு நாடுகளும் நேட்டோவில் சேர்வதைத் துருக்கி எதிர்க்கிறது.

நேட்டோவில் உள்ள 30 நாடுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டால் தான் புதிய நாடுகள் அதில் சேரமுடியும்.

பின்லாந்தும் ஸ்வீடனும் குர்தியத் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் வழங்கிவருவதாகத் துருக்கி குற்றஞ்சாட்டுகிறது.

பின்லாந்தும் ஸ்வீடனும் நேட்டோவில் சேர்வதை அமெரிக்கா முழுமையாக ஆதரிக்கிறது. அவ்விரு நாட்டுத் தலைவர்களையும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் சந்தித்துத் தமது ஆதரவை உறுதிப்படுத்தினார்.

பின்லாந்துக்கும் ஸ்வீடனுக்கும் நேட்டோவில் சேர்வதற்கான எல்லாத் தகுதியும் இருப்பதாக பைடன் கூறினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்தே இந்த இரு நாடுகளும் நேட்டோவில் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளன. எனினும் நேட்டோவை அச்சுறுத்தலாக கருதும் ரஷ்யா, அந்த கூட்டணி விரிவுபடுத்தப்படுவதும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது.

## அமெரிக்கா, ஐரோப்பா, கனடாவில் குரங்கம்மை நோய் சம்பவம் பதிவு



குரங்கம்மை நோய் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவில் பரவி உள்ளது பற்றி விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக சுகாதார நிர்வாகங்கள் மற்றும் உள்ளூர் ஊடகங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

பிரான்ஸ், இத்தாலி, சுவீடன் மற்றும் அவுஸ்திரேலியாவில் புதிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அமெரிக்கா, ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கலில் கடந்த புதன்கிழமை குரங்கம்மை சம்பவங்கள் பதிவான நிலையிலேயே தற்போது புதிய நாடுகளுக்கு பரவியுள்ளது. அதேபோன்று 13 சந்தேகத்திற்கு இடமான சம்பவங்கள் குறித்து கனடா விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குரங்கம்மை நோய் மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் தொலைதூர பகுதிகளில் பொதுவாகப் பரவக்கூடிய நோயாக உள்ளது.

பயணங்களுடன் தொடர்புபட்டே இந்த பிராந்தியங்களுக்கு வெளியில் இந்த நோய் பரவுகிறது.

மிக அரிதான வைரஸ் தொற்றாக இருக்கும் குரங்கம்மை லேசான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்பதோடு பெரும்பாலான சம்பவங்களில் சில வாரங்களில் குணமடையக்கூடியதாக உள்ளது என்று பிரிட்டன் தேசிய சுகாதார சேவை குறிப்பிட்டுள்ளது.

இது மக்களிடையே இலகுவாக பரவாது என்பதோடு பொதுமக்களிடையே பரந்த அளவில் அச்சுறுத்தலை ஏற்படுத்து சாத்தியம் குறைவாகவே உள்ளது.

கடந்த மே 7ஆம் திகதி பிரிட்டனில் முதல் தொற்று சம்பவம் பதிவானது. அந்த நோயாளி அண்மையில் நைஜீரியாவில் இருந்து பயணித்தவராவார். அவர் இங்கிலாந்துக்கு பயணிப்பதற்கு முன்னரே தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று பிரிட்டன் சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனில் தற்போது உறுதி செய்யப்பட்ட ஒன்பது தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன் மூலங்கள் இன்னும் உறுதி செய்யப்படாத நிலையில் இவை உள்நாட்டில் பரவி இருக்க வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## அண்டைய நாடுகளின் உணவு பாதுகாப்புக்கு இந்தியா உறுதி



உலகச் சந்தையில் கோதுமையின் விலை அதிகரித்த போதும், உணவுப் பாதுகாப்பு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அண்டை நாடுகளுக்கு கடுமையான நேரங்களில் உணவுப் பாதுகாப்புக்கு இந்தியா உதவி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் தலைமையில், ஐ.நா பாதுகாப்புச் சபையில், மோதல்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய வெளியுறவு இணை அமைச்சர் முரளிதரன், உக்ரைன் போரினால் ஏற்பட்டிருக்கும் விலை உயர்வு காரணமாகவும் கோதுமைக்கு சர்வதேச சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியா போன்ற நாடுகளில் போதிய அளவு கோதுமை கையிருப்பு உள்ள நிலையிலும் விலை உயர்வு அதிகரித்திருப்பது, இந்தியா மற்றும் அண்டை நாடுகளின் உணவுப் பாதுகாப்புக்கு சவாலாக இருப்பதாக முரளிதரன் தெரிவித்தார்.

தனது தேவைகளுக்காகவும் தனது அண்டை நாடுகளின் பாதுகாப்புக்காகவும் இந்தியா கோதுமை ஏற்றுமதிக்குத் தடை போன்ற நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

உணவுக்கான தேவை உள்ள அரசுகள் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்தால் அவர்களுக்குத் தேவையான கோதுமையை அளிக்க முடியும் என்றும் முரளிதரன் விவாதத்தில் எடுத்துரைத்தார்.

கொவிட் பேரிடர் காலத்திலும் அதன் பின்னரும் இந்தியா ஆப்கானிஸ்தான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளுக்கு கோதுமையை ஏற்றுமதி செய்துள்ளதாகவும் அமைச்சர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

## பைடனின் ஆசிய பயணம் ஆரம்பம்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று தென் கொரியாவுக்கு பயணமானார். தொடர்ந்து அவர் இன்று ஜப்பானுக்குப் பயணிக்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின் பைடன் ஆசியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். ஆசியாவில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்த அவர் முனைகிறார்.

அத்துடன் சுதந்திரமான, தடையற்ற இந்தோ–பசிபிக் வட்டாரத்தை உறுதிசெய்யும் பைடன் நிர்வாகத்தின் நோக்கத்தையும் அவர் முன்வைப்பார்.

அவரது வருகையின்போது வட கொரியா அணுவாயுதச் சோதனையை நடத்தக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

எந்த நேரத்திலும் அணுவாயுதச் சோதனையை நடத்த வட கொரியா தயாராய் இருப்பதாகத் தென் கொரிய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

அணுவாயுத நாடான வட கொரியா, வட்டாரத்தின் பாதுகாப்புக்கு விடுக்கும் மிரட்டல் குறித்தும் பைடனின் வருகையின்போது பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட கொரியா ஏற்கனவே இந்த ஆண்டில் சாதனை எண்ணிக்கையாக 16 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செவ்வாயில் கதவின் வாயில் வடிவில் துளை



செவ்வாய்க் கோளில் கதவு ஒன்று இருப்பதைப் போன்று காட்டும் படங்கள் அண்மையில் இணையத்தில் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் நாசா ஆய்வகத்துடைய கியுரியோசிட்டி விண்கலம் செவ்வாய்க் கோளில் எடுத்த சில படங்கள் வெளியிடப்பட்டன.

இம்மாதம் 7ஆம் திகதி எடுக்கப்பட்ட படத்தில் மௌன்ட் ஷார்ப் எனும் மலையிலுள்ள குன்று இடம்பெறுகிறது. குன்றில் ஒரு பெரும் துளை தென்படுகிறது.

30 சென்ட்டிமீற்றர் உயரத்திலும் 40 சென்ட்டிமீற்றர் அகலத்திலும் இருக்கும் அந்தத் துளை ஒரு கதவைப் போன்று தோன்றுகிறது. ஒரு நாய் அதற்குள் நுழைவதற்கான சரியான அளவில் அது உள்ளது.

அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இணையவாசிகள் பலர் படம் போலியானதா என்றுகூட கேள்வி எழுப்பினர். இருப்பினும், படம் உண்மைதான் என்று நாசா ஆய்வகம் கூறியுள்ளது.

துளை இருந்தது உண்மை ஆனால் அது வேற்றுலக மனிதர்களின் பயன்பாட்டுக்கா என்பது தெரியவில்லை. அது போன்ற துளைகள் செவ்வாய்க் கோள், பூமி ஆகியவற்றின் மேற்பரப்பில் காணப்படலாம் என்று கூறப்பட்டது.

துளை இயற்கையாக உருவான ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஷங்ஹாய் நகரில் மீண்டும் கொவிட்



சீனாவின் ஷங்ஹாய் நகரில் 5 நாட்களுக்குப் பின் மீண்டும் கொவிட்–19 சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன.

5 நாட்களாகத் தனிமைப்படுத்தும் வட்டாரத்துக்கு வெளியே எந்த ஒரு சம்பவமும் பதிவாகவில்லை. அதையடுத்து ஜூன் முதலாம் திகதியிலிருந்து நகரம் முழுவதும் விதிக்கப்பட்டுள்ள முடக்கம் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. புதிய சம்பவங்கள் தோன்றினாலும் திட்டமிட்டபடி முடக்கம் தளர்த்தப்படும் என்று நம்பப்படுகிறது.


25 மில்லியன் பேர் வசிக்கும் வர்த்தக நகரான ஷங்ஹாயில் வைரஸ் தொற்றைத் துடைத்தொழிக்க அதிகாரிகள் கடுமையாக போராடினர்.

இருப்பினும் தனிமைப்படுத்தும் வட்டாரத்துக்கு வெளியே மூவருக்கு நோய் தொற்று ஏற்பட்டுள்ளது.

கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வட்டாரங்களிலும் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஷங்ஹாய்ப் புறநகர்ப் பகுதிகளில், பூங்காக்கள் வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து திறக்கப்படும்.

மற்ற பூங்காக்கள், கேளிக்கை இடங்கள் ஜூன் மாதம் முதல் திறந்திருக்கும்.

## உக்ரைனையும் ஈராக்கையும் குழப்பிக்கொண்ட ஜோர்ஜ் புஷ்




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், உக்ரைன் என்று சொல்வதற்குப் பதில் ஈராக் மீதான படையெடுப்பு 'கொடூரமானது' என்றும் 'நியாயமற்றது' என்றும் கூறியுள்ளார்.

தவறை உணர்ந்ததும் தாம் சொல்லவந்தது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு என்று திருத்திக்கொண்டார்.

அமெரிக்காவின் டலாஸ் நகரில் உரையாற்றியபோது அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் ரஷ்யாவின் அரசியல் அமைப்பைக் குறைகூறிக்கொண்டிருந்தார்.

'ஈராக் மீதான கொடூரமான, நியாயமற்ற படையெடுப்பு ஓர் ஆடவரின் முடிவு' என்று கூறிய புஷ், தலையை ஆட்டி, 'நான் சொல்லவந்தது உக்ரைன்' எனச் சொல்லித் திருத்திக்கொண்டார். அந்தத் தவறுக்குத் தமது வயதே காரணம் என நகைச்சுவையாகச் கூறினார் புஷ்.

2003ஆம் ஆண்டு புஷ் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, அமெரிக்கா, ஈராக் மீது படையெடுத்தது. அங்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டது.

ஆனால் அங்கு அத்தகைய ஆயுதம் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஈராக்கியப் போரில் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் புலம்பெயர நேரிட்டது.

## ரஷ்யத் தாக்குதலால் உக்ரைனின் டொன்பாஸ் பகுதி முற்றாக அழிவு



உக்ரைனின் டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யாவின் புதிய தாக்குதல்கள் அந்தக் கிழக்குப் பிராந்தியத்தை நரகமாக மாற்றி இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார். ரஷ்யா அர்த்தமற்ற தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

கடந்த பெப்ரவரியில் முழு வீச்சில் படையெடுப்பை மேற்கொண்ட ரஷ்யா உக்ரைன் தலைநகரை கைப்பற்றுவதில் தோல்வி அடைந்ததை அடுத்தே டொன்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்றுவதற்காக உக்கிர தாக்குதல்களை ஆரம்பித்தது. ஒன்றிணைந்த டொன்பாஸ் மற்றும் லுஹான்ஸ் பிராந்தியங்களில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் சார்பிலேயே ரஷ்யா உரிமை கோரி வருகிறது.

'ஆக்கிரமிப்பாளர்கள் அழுத்தத்தை அதிகாரிக்க முயற்சிக்கின்றனர். அங்கு நரகமாக உள்ளது என்று கூறுவது மிகையாகாது' என்று கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய செலென்ஸ்கி கூறினார்.

லுஹான்ஸ்க் பிராந்தியத்தின் செவெரொடொனட்ஸ்க் நகரில் கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட கொடிய மற்றும் அர்த்தமற்ற குண்டுவீச்சில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

'மத்திய உக்ரைனில் இருக்கும் ஒடெசா பிராந்தியத்தின் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. டொன்பாஸ் முற்றாக அழிந்துவிட்டது' என்றும் அவர் கூறினார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மே 21 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.33 |
| லுஹர் | 12.08 |
| அஸர் | 03.32 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் வைகாசி 7

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

## தேசிய பாடசாலைகளுக்கான மாணவர் அனுமதி கடிதங்கள் வழங்கல் இடைநிறுத்தம்



தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான கடிதங்கள் வழங்குவது நேற்று 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகள் விடுமுறையின் முடிவில் இது தொடர்பாக கொள்கை ரீதியான எடுக்கப்படும் தீர்மானம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. நேற்று (20) கல்வி அமைச்சில் புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவியேற்றதன் பின்னர் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.





நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு, சீர்திருத்த அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் நேற்று தமது அமைச்சில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றபோது... படங்கள் சுதத் மலவீர, சாலிய பீரிஸ்

### இந்திய நிதி அமைச்சருடன் இ.தொ.கா சந்திப்பு!

## இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுமாறு கோரிக்கை



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வுகாண உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்திய நிதி அமைச்சர் நிர்லமா சீதாராமனை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் இந்திய தூதரகத்தின் ஊடாக இலங்கைக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்திய நிதி அமைச்சர் நிர்லமா சீதாராமனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.காவின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பானவரான பாரத் அருள்சாமி ஆகியோர் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்திய

06

### ஹெரோயினுடன் மூவர் அதிரடியாகக் கைது

# ஒரு கோடியே 79 இலட்சம் பணமும் மீட்பு



சுமார் 03 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் ஒரு போதைப் பொருள் விற்பனை மூலம் கிடைத்த ஒருதொகை பணத்துடன் பெண்ணொருவர் உள்ளிட்ட 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொடகம, அத்துருகிரிய பிரதேசத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 294 கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் கிடைத்த தகவலுக்கமைய அங்கமுவ பாதுக்க பிரதேசத்தில் 03 கிலோ 300 கிராம் ஹெரோயினுடன் பிரிதொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இண்டாவது சந்தேக நபரிடமிருந்து பெற்றுக் கொண்ட தகவலுக்கமைய போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய மற்றும் அதற்கு உதவிகளை வழங்கியமை தொடர்பில் அங்கமுவ பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இப்பெண்ணிடமிருந்து ஹெரோயின் வியாபாரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு கோடியே 79 இலட்சத்து 36, 500 ரூபா பணமும், போதைப் பொருள் வியாபாரத்திற்காக உபயோகிக்கப்பட்ட முச்சக்கரவண்டியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இம்மூவரும் டுபாயிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள நபரொருவருடன் தொடர்புடையவர்கள் என்பதும் , டுபாயிலுள்ள நபர் கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவன் என்பதும் மேலதிக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## வன்முறைகளுக்கு பொறுப்பான சகலரும் தண்டிக்கப்படவேண்டும்

### நாமல் எம்.பி

நாடு முழுவதும் கடந்த 09 ஆம் திகதியன்று இடம்பெற்ற வன்முறையில் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர், இந்த கோரிக்கையை விடுத்தார்.

இதன்போது, ஆட்சேபனையை வெளியிட்ட, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர், நாமல் ராஜபக்ஷ கூறுவதில் நியாயம் இருப்பதாக குறிப்பிட்டார்.

இதன்படி, 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைக்கு காரணமான நாமல் ராஜபக்ஷ, பொலிஸில் சரணடைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

எனினும் இதனை மறுத்த நாமல் ராஜபக்ஷ,

இச் சம்பவத்துக்கு பொறுப்பானவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், வாக்கு மூலங்களை வழங்கியுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

## கலவரத்தின் வலியை 39 வருடங்களுக்கு முன்னரே அனுபவித்தவர்கள் நாங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டில் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களின் பின்னரே பாதிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு அதன் வலி தெரிகின்றது. ஆனால் 39 வருடங்களுக்கு முன்னரே இந்த வலியை அனுபவித்தவர்கள் நாம் என பழனி திகாம்பரம் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இடம்பெற்ற அசம்பாவிதத்தில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரது வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய வேதனையை அவர்கள் இப்போதுதான் உணருகின்றனர். ஆனால் வீடுகள் எரிக்கப்படும் வேதனையின் வலியை 39 வருடங்களுக்கு முன்பே எமது மக்கள் அனுபவித்தனர்.

1983 ஜூலை கலவரத்தை நாங்கள் நேரடியாகவே பார்த்தோம்.தமிழ் மக்களின் வீடுகள்,கடைகள் எரிக்கப்பட்டன. அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டு அவர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.அதற்காக இந்த சம்பவத்தை நாம் ஆதரிக்கவில்லை. கலவரத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

வீடுகளை எரித்தவர்களுக்கும் அலரி மாளிகைக்கு வருகை தந்த மக்களை தூண்டிவிட்ட அமைச்சர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

06

## எம்.பிக்களுக்கான உணவகத்தை மூடி விடுமாறு வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

### பொது ஜன பெரமுன எம்.பிக்கள் 53 பேர் கையெழுத்திட்டு சபாநாயகருக்கு கடிதம்

பாராளுமன்றத்திலுள்ள எம்.பிக்களுக்கான உணவகத்தை மூடி விடுமாறு பொதுஜன பெரமுன எம்.பி. க்கள் 53 பேர் கையெழுத்திட்டு முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் 53 எம்.பிக்கள் கையெழுத்திட்டு சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

நாட்டு மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் ஒருவேளை உணவை பெற்றுக் கொள்வதில் கூட பெரும்பாலான மக்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதையும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற ஊழியர்கள் 900 பேருக்கான பகலுணவுக்கு மாத்திரம் பெருந்தொகை நிதி செலவிடப்படுகிறது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பகலுணவை இடைநிறுத்துமாறு இதன் மூலம் நாம் வலியுறுத்துகிறோம். பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது முழு நாளும் விவாதம் நடைபெறும் நாட்களில் உணவகங்களின் விலைக்கமைய உணவுப் பொதிகளை வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டுமக்கள் எதிர்க்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு இறுதித் தீர்வு காணும் வரை இந்த கோரிக்கையை செயற்படுத்தமாறு வலியுறுத்துகிறோம் என்றும் அவர்கள் அக்கடிதத்தின் மூலம் கோரியுள்ளனர்.

### அமைச்சு பதவிகளில் சு.க MPக்கள்;

## கட்சி தீர்மானத்தை மதிக்க தவறியதாக மைத்திரி கவலை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தற்பொழுது உருவாக்கும் அரசு சர்வகட்சி அரசோ இடைக்கால அரசோ அல்ல எனவும் அமைச்சு பதவிகளை ஏற்காது வெளியில் இருந்து ஒத்துழைக்க முடிவு செய்திருக்கையிலே கட்சி முடிவுக்கு மாற்றமாக சு.க பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சு பதவிகளை ஏற்றுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது, அமரகீர்த்தி அதுகோரள சத்தமாக கூட பேசாதவர்.

06

### ஜூன் மாதம் வரை குறிப்பிட்ட நாட்களில்

## மாலை 6.30 மணிக்கு மேல் மின்வெட்டு இல்லை




2021 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை முடிவடையும் வரை மின்வெட்டை அமுல்படுத்துவதை தவிர்க்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதுமான எரிபொருள் மற்றும் நீர் வளங்களை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். மே மாதம் 23 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 01 ஆம் திகதி வரை மாலை 6.30 மணிக்குப் பின்னர் மின்வெட்டை அமுல்படுத்துவதைத்

06

## மரக்கறி விலைகள் 60 சத வீதத்தினால் அதிகரிப்பு

### தக்காளி ஒரு கிலோவின் விலை 700 ரூபாவானது



மலையக மற்றும் ஏனைய பகுதிகளின் மரக்கறி வகைகளின் விலைகள் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 60 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. தக்காளி கிலோ ஒன்றின் விலை தற்போது 700 ரூபா வரையில் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார மைய ஒன்றியத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். பச்சை மிளகாய் கிலோ ஒன்றின் விலை 650 ரூபா முதல் 700 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கு கடன் நிவாரணங்களை வழங்கல்

### ஜி–7 நாடுகள் ஒத்துழைக்கும்




இலங்கை பெற்றுள்ள கடன்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்காக ஒத்துழைப்பு வழங்க ஜி7 நாடுகள் முன்வந்துள்ளன. உலக வல்லரசுகளின் அமைப்பான ஜி7 நாடுகளின் நிதியமைச்சர்களது மாநாடு ஜேர்மனியில் நடைபெறுகிறது.

அந்த மாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்ட கடிதம் ஒன்றில், இலங்கை பெற்றுள்ள கடன்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 251.46 | 267.85 |
| கனடியன் டொலர் | 279.08 | 291.91 |
| யூரோ | 385.89 | 401.40 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 448.89 | 468.16 |
| சுவிஸ் பிராங்க் | 365.24 | 379.01 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.83 |
| குவைத் டினார் | 1,188.53 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 07ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

இருப்பது, இயற்றக் கூடியது, இனியும் ஈட்டக் கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ளாவிட்டால், வலிமையோ அல்லது வளமோ இருப்பது போல் தோன்றினாலும் கூட அவை இல்லாமல் மறைந்து போய் விடும்.

## நெருக்கடி தீரும் வரை அனைவரும் பொறுமை காப்பது மிக அவசியம்

நாட்டில் பல மாதங்களாக நிலவிய பொருளாதார நெருக்கடி இன்னும் ஓரிரு மாதங்களில் ஓரளவு தணிவு நிலைமையை நோக்கிச் செல்லுமென்பதே பலரதும் நம்பிக்கையாக இருக்கின்றது. புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க வகுத்திருக்கின்ற புதிய திட்டங்களும், பாராளுமன்றத்தில் அவருக்குக் கிடைத்திருக்கின்ற அதிகபட்ச ஆதரவும் அந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

அரசியல்வாதிகளும், சாதாரண பொதுமக்களும் சிறிது காலத்துக்கு அர்ப்பணிப்புடனான ஆதரவை அரசுக்கு அளிக்க முன்வருவார்களானால் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வது மிகக் கடினமான காரியமாக இருந்து விடப் போவதில்லை. மக்களினதும், எமது அரசியல்வாதிகளினதும் பொறுமையிலும், புரிந்துணர்விலும்தான் நாட்டின் சுபிட்சமே தங்கியுள்ளது என்பதுதான் உண்மை.

எமது தாய்நாடு தற்போது நெருக்கடியான காலப் பகுதிக்குள் பிரவேசித்துள்ளதென்பதை கற்றறிந்தவர்கள் மாத்திரமன்றி சாதாரண மக்களும் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர். இன்று எமது நாடு அனுபவிப்பது மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஆகும். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் இவ்வாறான நெருக்கடியை முன்னர் ஒருபோதுமே சந்தித்ததில்லை என்பதை அறிய முடிகின்றது.

மக்கள் பயன்படுத்துகின்ற அன்றாட பாவனைப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்து விட்டன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக மக்கள் அல்லல்படுகின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மக்கள் மாத்திரமின்றி நடுத்தர வர்க்க மக்களும் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதற்கே தற்போது அல்லல்படுகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. வறிய மக்களின் துன்பங்கள் சொல்லும் தரமன்று. அத்துடன் சமையல் எரிவாயு மற்றும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களின் விலையுயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட கியூ வரிசையானது இன்னுமே முடிவுக்கு வந்தபாடாக இல்லை.

இத்தனை நெருக்கடிகள் நிலவுகின்ற வேளையிலேயே புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பதவியேற்றுள்ளார். அவரது பதவியேற்பு தொடர்பாக பலர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அதேவேளை சில தரப்புகளில் இருந்து பரவாக எதிர் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரேயொரு விடயத்தை மாத்திரம் மிகத் தெளிவாக சமீபத்தில் அவரது உரையின் போது தெரிவித்திருந்தார்.

தான் அரசியல் செய்வதற்கு வரவில்லையென்றும், வீழ்ச்சியடைந்து கிடக்கும் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கே வந்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அன்றைய தினம் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் கூறுவதானால் அரசியல் செய்வதற்குரிய வேளை இதுவல்ல. ஒட்டுமொத்த நாடே அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கிடக்கும் போது அரசியல் நோக்கங்களை உள்ளத்தில் வைத்துக் கொண்டு எவராவது காய்களை நகர்த்துவார்களானால் அதைப் போன்ற முட்டாள்தனமான செயல் வேறொன்றுமே இருக்க முடியாது.

அவ்வாறு அரசியலை நோக்கமாகக் கொண்டு இன்றைய இக்கட்டான நிலையில் செயற்படுவது தவறாகும். எமது அரசியல்வாதிகள் முதலில் இதனைப் புரிந்து கொள்வது அவசியம். நாட்டில் உருவெடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதென்பது ஓரிரு நாட்களுக்குள் முடிவுக்கு வருகின்ற காரியமல்ல. அதற்கு சில மாதங்கள் தேவையாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அந்த உண்மையை நன்கு மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்ற பொருளாதாரத்தை மீட்டெடுக்கின்ற விடயத்தில் முதலில் நம் அனைவருக்கும் நம்பிக்கையே பிரதானமாகின்றது. அதுமாத்திரமன்றி அர்ப்பணிப்பு, பொறுமை ஆகியனவும் தேவையாகின்றன. புதிய பிரதமர் பதவியேற்றவுடன் உடனடியாகவே அனைத்து நெருக்கடிகளும் நீங்கி விடுமென எவராவது எதிர்பார்ப்பார்களானால் அது தவறாகும். சில மாதங்கள் மக்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியது அவசியம்.

இந்த விடயத்தில் ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப்பு உண்டென்பதை மறந்து விடலாகாது. சில தொலைக்காட்சி ஊடகங்கள் எதிர்மறையான செய்திகளையே எப்போதும் வெளியிட்டு வருகின்றன. எரிபொருள் நிலையங்களில் திரண்டிருக்கின்ற மக்கள் கூட்டத்தையே அந்தத் தொலைக்காட்சிகள் எப்போது ஒளிபரப்பி வருவதைக் காண முடிகின்றது. அவலங்களையே அவை தொடர்ந்தும் ஒளிபரப்பி வருகின்றன.

அவ்வாறான ஊடகப்பண்பு தவறானது. நாடு தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்ற வேளையில் அச்சத்தையும் பதற்றத்தையும் தணிக்க வேண்டியது ஊடகங்களின் கடமையாகும். மக்கள் உள்ளங்களில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியதும் அவற்றின் கடமை.

editor.tkn@lakehouse.lk

# அம்பாறை மாவட்ட முப்பெரு விழாவிற்காக சாய்ந்தமருதில் ஏற்பாட்டுக் குழுக் கூட்டம்










அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் முப்பெரு விழாவிற்கான ஏற்பாட்டுக் குழுக் கூட்டம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

பேரவையின் தலைவர் தேசபந்து ஜலீல் ஜீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேரவையின் பொதுச் செயலாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதான உரை நிகழ்த்தினார்.

அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் நிறைவேற்று சபை உயர்பீட நிர்வாகிகளின் தீர்மானத்திற்கிணங்க 'அட்சயம்' கவிதைத் தொகுதி வெளியீடு, சிரேஷ்ட கவிஞர்களின் கவிதை வாசித்தல், பாராட்டுப் பத்திரம் வழங்கல், அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் ஆளுமைகளுக்கு 'மங்கையர் திலகம் விருதுகள்' வழங்கிக் கௌரவித்தல் ஆகிய முப்பெரு விழாவை எதிர்வரும் ஜூன் மாதம் 05ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பல மேடை நிகழ்ச்சிகள் உள்ளடங்கலாக காலை 8.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பேரவையின் நிறைவேற்று உயர்பீட நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இணைப்பாளர்கள் அடங்கலாக நிதியீட்டக் குழு, வெளியீட்டுக் குழு, ஊடகப் பிரசாரக் குழு, சேமநலன்புரிக் குழு மற்றும் கலை கலாசாரக் குழு என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழுப் புகைப்படங்கள் மற்றும் பேரவையின் நிறைவேற்று உயர்சபையின் உறுப்பினர்கள் அடங்கலான புகைப்படங்களும் எடுக்கப்பட்டு, பொறுப்புக்கள் வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் முப்பெரும் விழாவுக்குரிய ஒத்திகைகளும் பார்க்கப்பட்டன.

பேரவையின் செயலாளர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, பொருளாளர் செஸிலியா மற்றும் கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டு ஆலோசனைகளும், ஒத்துழைப்புக்களையும் வழங்கினார்கள்.

அங்கு சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி 'அட்சயம்' கவிதைத் தொகுதி நூல்வெளியீடு, 'மங்கையர் திலகம்' விருது வழங்கல் மற்றும் சிறப்பு கவிதைகள் உரைத்தல் தொடர்பாகவும் ஏற்பாட்டு ஒத்திகை நிகழ்ச்சிகள் இடம்பெற்ற ன.

பேரவையின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# வடமத்திய மாகாணத்தில் அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவிக்க மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கை



வடமத்திய மாகாணத்தில் அலங்கார மீன் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக கடந்த வருடம் 52 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக வடமத்திய மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் செனரத் பத்திரன தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், சீமெந்து தொட்டி உதவி, உபகரணங்கள் மற்றும் மூடுதல் போன்ற பல துறைகளில் அலங்கார மீன்வளர்ப்பு வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளுக்கான வசதிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, தரமான அலங்கார மீன் உற்பத்தியின் மூலம் பயனாளிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் 780 பயனாளிகளுக்கு 5 மில்லியன் ரூபா செலவில் திறன் மேம்பாட்டு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அலங்கார மீன் உற்பத்திச் சூழலை முறைப்படுத்துவதற்கான சீமெந்து தொட்டிகளை அமைப்பதற்காக அமைச்சு 23 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.





பயனாளிகள் 224 பேர் தெரிவாகியுள்ளனர். இதன்படி, ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

50% பயனாளிகளின் பங்களிப்பின் கீழ், அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 433 பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. செலவிடப்பட்ட தொகை 12 மில்லியன் ரூபா. பறவை வலைகள், நிழல் வலைகள், சுற்றளவு வலைகள் மற்றும் சுற்றுச்சுவர் உறைகள் போன்ற உபகரணங்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன. சுற்றளவு விநியோகத் திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் புலகல மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 168 பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இது 50% பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் செயல்படுகிறது

வடமத்திய மாகாணத்தில் கடற்றொழில் சங்கங்களை நிறுவி மிகவும் முறையான செயற்பாடாக இந்த அலங்கார மீன் அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக விவசாய அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் அதிகளவான பயனாளி உறுப்பினர்களைக் கொண்ட 10 சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனுராதபுரம் மாவட்டத்தில் 07 சங்கங்களும் பொலன்னறுவை மாவட்டத்தில் 03 சங்கங்களும் உள்ளன.

வடமத்திய மாகாணத்தில் தற்போது அலங்கார மீன் உற்பத்தி செயற்பாட்டில் பாரிய வளர்ச்சி காணப்படுவதாகவும், இது தொடர்பில் மக்களின் விசேட ஆர்வம் காணப்படுவதாகவும் விவசாய அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. வடமத்திய மாகாண விவசாய அமைச்சு அலங்கார மீன் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



**ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...**
(திறப்பனை தினகரன் நிருபர்)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது தேசம் விடுபட வேண்டும்

## மலிபன் நிறுவனம் அறிக்கை

எங்கள் தேசத்தின் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத வகையில் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில், ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக உத்வேகமளிக்கும் நலச்செழுமையுடன் தளைத்தோங்கிய ஒரு பாரம்பரியமான இலங்கை நிறுவனமாக, தேசத்தின் மோசமான பொருளாதார நிலைமைகள் காரணமாக கடும் இன்னல்களை அனுபவிக்கும் சக இலங்கை நுகர்வோர் மற்றும் பங்குதாரர்கள் தொடர்பில் நாம் எப்போதும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளதுடன், அனைவரும் இந்த நிலைமையிலிருந்து விடுபட வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை என்று மலிபன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எத்தகைய துன்பங்கள் வந்தாலும், அதிலிருந்து மீண்டெழும் ஆற்றல் படைத்த எமது இலங்கைப் பொதுமக்களின் உத்வேகம் மற்றும் ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைவாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும், அதிலும் குறிப்பாக எமது ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளையும் போற்றும் நாம், அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து வருகிறோம். அனைத்து தரப்பினரிடையேயும் பரஸ்பர மரியாதை அடிப்படையில் சிறந்த வெளிப்படையான கொள்கைகள், நல்லாட்சி மற்றும் அரசியல் இலாப நோக்கற்ற அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவாறு, இழந்து போன எமது மகிமையையும், பெருமையையும் இலங்கை மீளப் பெறுவதற்கு வழிகாட்ட வேண்டும் என்ற அவர்களின் உன்னதமான அபிலாஷைகளுக்கு எமது ஆதரவைக் காண்பிக்கும் வகையில் நாமும் கைகோர்க்கின்றோம்.

கடந்த காலங்களில் பல சோதனைகள் மற்றும் இன்னல்களை வெற்றிகரமாக முறியடித்த ஒரு தேசம் என்ற வகையில், பொருளாதார நிச்சயமின்மை நிலவும் காலகட்டத்தை வெற்றி கொள்வதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று மலிபன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கல்வித்துறை வளர்ச்சிக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

## இலங்கையின் வரலாற்றில் ஒரு அறிவுப் பொக்கிஷம்

**கல்வி உலகில் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு அறிவு புகட்டி அத்தனை பேரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்ற பேராசான் இவர். இலங்கையின் கல்விச் சமூகம் இவருக்கென வழங்கிய சிம்மாசனம் இன்று வெறுமையாகிக் கிடக்கின்றது.**

தாம் பெற்றக் கல்வியைத் தனது சமூக உயர்வுக்காக அள்ளி இறைத்த எளிமையான மனிதர். தன்னை நாடி வருபவர்களை புன்னகையுடன் ஏற்று, சகஜமாக பேசும் பக்குவம் கொண்டவர். தனது உரைகளில், எழுத்துக்களில் பன்முக கலாசார வளர்ச்சி பற்றியும் சமூகத்தின் எழுச்சி பற்றியும் தொடர்ச்சியாக பேசிய ஆசான் அவர். அதனை வழிநடத்த இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும் எனவும் கூறிய பொதுமனிதர் இவர்.

கல்விச் சிந்தனையாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர், சமூகப் பற்றாளர், மொழிப்புலமையாளர், சிறந்த நாவன்மையாளர், பன்னூல் படைப்பாளர், நேர்படப் பேசும் நெறியாளர், சிறந்த மனிதப் பண்பாளர் என்ற பல ஆளுமைகளைக் கொண்ட இவர், கல்விச் சமூகத்தில் தனக்கான இடத்தினை கொண்டு, கோட்பாடுகளை அறிந்து அவற்றிலிருந்து வெளியே வந்து நடைமுறை உலகோடு பொருந்தி சமூகப் புலத்துடன் கல்வியை உணர்த்தி நின்றவர்.

பல்கலைக்கழக காலத்தில் கற்றல், வாசிப்பு, எழுத்து, இலக்கியம், நாடகம் என பலததுறை ஆர்வலராக விளங்கிய பேராசிரியர், தனக்கான இடத்தினை தக்க வைத்துக் கொள்ள சிறந்த முயற்சியும் அர்ப்பணிப்பும் கொண்டவராக செயற்பட்டுள்ளார். தனது வாழ்நாளில் இந்திய வம்சாவளி தமிழர்களின் முக்கியத்துவம், பிரச்சினைகள் பற்றி கூறும் 'இலங்கை இந்திய வரலாறு' என்ற முதல் நூலினை வெளியிட்டமை முக்கியமானதாகும்.

சிறந்த கல்வியிலாளரான இவர் நாட்டின் கல்விக் கொள்கை, பாடத்திட்டம், மொழிபெயர்ப்பு, உயர்கல்வி, பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, புத்தாக்கம், சர்வதேச தரத்திலான கல்விப்புலத்தினை உள்நாட்டில் ஏற்படுத்தல் போன்ற இன்னும் பல விடயங்களில் தன்னை முழுமையான அர்ப்பணித்த ஓர் ஆசானாவார். இவை தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை நூல்கள், பத்திரிகை கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார்.

ஆசிரியர் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர், புதிய நூற்றாண்டுக்கான ஆசிரியர் கல்வி என்ற தனது கட்டுரையில் 'புதிய நூற்றாண்டுக்கான புதிய கல்விச் சூழமைவானது, புதிய விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக அறிவியல் அறிவையும் உயர்மட்டத் திறன்களை பலவற்றையும் வலியுறுத்துகின்றது.

இவற்றோடு நற்பண்பு வளர்ச்சி, கற்பதற்கு கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கங்களை ஏற்படுத்தல் என்பனவும் அடங்கும். இவை யாவும் ஆசிரியர் கல்வியிலும் பயிற்சியிலும் பிரதான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆசிரியர்கள் தாம் பாட நிபுணர்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு, மாணவர்களோடு இணைந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

கல்வித்துறையில் அவர் பார்வை படாத இடமே இல்லை. வகுப்பறைக் கல்வியிலிருந்து பாடசாலைக் கல்வி, மலையகக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, இளையோருக்கான கல்வி, புதிய நூற்றாண்டுக்கான கல்வி, வாழ்க்கைகான கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி, நவீன கல்விச் செல்நெறிகள் வரை அவர் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதிக் குவித்துள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதியுள்ள முப்பதுக்கும் அதிகமான நூல் படைப்புக்கள், எழக் கூடிய அனைத்து கேள்விக்கும் விடை கிடைக்கும் அறிவு களஞ்சியங்களாக உலாவருகின்றன.

குறிப்பாக, பேராசிரியரின் கல்விசார்ந்த படைப்புகளில் கல்வியியல் கட்டுரைகள், இலங்கையின் கல்வி வளர்ச்சி, கல்வியும் மனித மேம்பாடும், கல்வி ஒரு பன்முக நோக்கு, கல்வித் திட்டமிடல், புதிய கல்வித் தடங்கள், முகாமைத்துவக் கொள்கைகள் ஓர் அறிமுகம், கல்வியும் மனிதவள வளர்ச்சியும், உயர் கல்வியில் புதிய செல்நெறிகள் என முப்பதுக்கும் அதிகமான கல்வி சார்ந்த நூல்கள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.



சமூக வாழ்விலும் சரி, தனிமனித வாழ்விலும் சரி கல்வி உட்புகாத, நுழையாத துறையே கிடையாது. கல்வியியல் அறிவுத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள் நாளும் கணமும் நம் புரிதலுக்குள் எளிதில் அடங்காத விசையில் வேகம் கொண்டு வியாபித்து விரியும் சூழலில் கல்வித் புலத்தில் இந்த மாற்றங்களை எதிர்கொள்ள தயாராக இருக்கக் கூடிய தலைமுறையினரை உருவாக்க எத்தனிக்க வேண்டும் என்பதனை தனது எழுத்திலும் உரையிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தியவராவார்.

கல்விச் சமூகம் எழுச்சி பெற வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்த இவர், பல ஆங்கிலக் கட்டுரைகளை மொழிபெயர்த்து அச்நெல் நெறியை பின்பற்ற எத்தனிக்க வேண்டும் என்ற பரந்த மனதினை கொண்டு செயற்பட்டார். கல்வித் துறைசார்ந்த விடயங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்ட பேராசிரியர், மலையக மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளையும் அவர்களின் வரலாறையும் கூறுவதில் பின்வாங்கவில்லை.

ஒரு சமூகம் விருத்தியடைவது கல்விசார்ந்த வளர்ச்சியினாலே என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பல பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தார்.

கல்வியுலகில் தனக்கான தனியிடத்தினை கொண்டுள்ள பேராசிரியர் தனது வாழ்நாளினை கல்விக்காகவே அர்ப்பணித்து, ஒட்டுமொத்த கல்விச் சமூகமும் கல்வியில் உயர்ச்சி பெற பங்குதாரராக செயற்பட்டவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அறிவுக் களஞ்சியமான பேராசான் பதித்துச் அறிவு விதைகள் விருட்சமாகி சமூகத்தின் வளர்ச்சிக்கு பயனளிக்கும் என்பது திண்ணம்.



**சி.அருள்நேசன்...**
கல்வியியல் பட்டதாரி

# குழந்தைகளை மட்டுமன்றி பெரியவர்களையும் கதை சொல்லி மகிழ்வித்த மாஸ்டர் சிவலிங்கம்

## பல்துறைக் கலைஞரின் துயரம் தரும் மறைவு

**மகாபாரதக் கதையை வியாசர் முதல் ஜெயமோகன் வரையில் பலரும் எழுதியிருக்கின்றனர். ஜெயமோகன் 'வெண்முரசு' என்னும் தலைப்பில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் தொடர்ந்து எழுதினார்.**

2014ஆம் ஆண்டில் விஷ்ணுபுரம் விருது விழா முடிந்து வீடு திரும்பியதும், தனது குழந்தைகளுக்கு மகாபாரதக் கதையைச் சொல்லி, அதில் வரும் பாத்திரங்களின் இயல்புகளையும் விபரித்திருக்கிறார்.

அவர் கதை சொல்லும் பாங்கினால் உற்சாகமடைந்த அவரது குழந்தைகள், "அப்பா, இந்தக் கதையையே இனி எழுதுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்ததும், அவர் அன்றைய தினமே மகாபாரதக்கதைக்கு 'வெண்முரசு' என்று தலைப்பிட்டு ஒவ்வொரு பாகமும் சுமார் 500 பக்கங்கள் கொண்டிருக்கத்தக்கதாக எழுதினார்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் விரும்பிய காவியம்தான் மகாபாரதம்.

இலங்கையில் ஒரு காலகட்டத்தில் மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மகாபாரதக்கதையைச் சொல்லிக் கொண்டிருந்த இரத்தினம் சிவலிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட 'மாஸ்டர் சிவலிங்கம்' அவர்கள் கடந்த 11 ஆம் திகதி மறைந்து விட்டார் என்ற துயரச்செய்தி எம்மை வந்தடைந்த போது மகாபாரதம்தான் மனக்கண்ணில் தோன்றியது.

இறுதியாக அவரை கடந்த 2019 ஆம் ஆண்டு எழுத்தாளர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணனுடன் சென்று பார்த்தேன். அச்சமயம் அவர் சிறுநீரக உபாதையினால் சிகிச்சைக்கு உட்பட்டிருந்தார்.

தொடர்ந்தும் அவரை வருத்த விரும்பாத காலன் தற்போது அவரை கவர்ந்து சென்று, நிரந்தர ஓய்வு கொடுத்து விட்டான்.

கிழக்கு மாகாணத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்திற்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. 'யாழ்நூல்' தந்த சுவாமி விபுலாநந்தருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

இசை, கூத்து, கல்வி, நாடகம், இலக்கியம், இதழியல் உட்பட பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்தவர்கள் தோன்றிய மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள மஞ்சந்தொடுவாயில் 1933 இல் பிறந்திருக்கும் மாஸ்டர் சிவலிங்கம் தமது 89 வயதில் வயது மூப்பினால் உண்டான உடல் உபாதை காரணமாக மறைந்துள்ளார்.

ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலமாக சிறுவர்களுக்கு கதைசொல்லும் கலைஞராகத் திகழ்ந்தவர். கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், வில்லுப்பாட்டு, நகைச்சுவை உரைச்சித்திரம் முதலான துறைகளில் பிரகாசித்தவர். அதற்காக பல விருதுகளும் பெற்றவர். சென்னைக் கலைக்கல்லூரியில் கேலிச்சித்திரத் துறையிலும் பயின்றிருப்பவர். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதமணி வீ. சீ. கந்தையா, கிருபானந்த வாரியார், செல்லையா இராசதுரை ஆகியோரிடத்திலும் கொழும்பு தமிழ்ச்சங்கம், மட்டக்களப்பு இந்து சமய அபிவிருத்திச் சங்கம் ஆகிய அமைப்புகளிடத்திலும் பாராட்டுப் பட்டங்கள் பெற்றவர். இலங்கை கலாசார அமைச்சின் விருது, வடகிழக்கு மாகாண அரசின் சாகித்திய விருது, மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருது என்பவற்றையும் பெற்றவர்.






ஒரு காலத்தில் இவரது ஆற்றல்களை நன்கு இனங்கண்டு கொண்ட புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, இவரை இலங்கை வானொலி கலையகத்திற்கு அழைத்துச் சென்று 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியை தயாரித்து வழங்கும் வானொலி மாமா சரவணமுத்துவிடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

"சிறுவர்களுக்கு நேரில் கதை சொல்ல முடியும். ஆனால், வானொலி ஊடாக சிறுவர்களுக்கு எவ்வாறு கதை சொல்வீர்?" என்று அந்த மாமா இவரிடம் கேட்டதும், அங்கிருந்த மாமாவின் பெரிய டயறியை கையில் எடுத்திருக்கிறார் சிவலிங்கம்.

"அதனை எதற்கு எடுக்கிறீர்?" என்று மாமா கேட்கிறார்.

"இதிலும் கதை இருக்கிறது" எனச் சொல்லி விட்டு, டயறியை கையில் வைத்து விரல்களினால் அதில் வெவ்வேறு ஒலி எழும் வகையில் தட்டியிருக்கிறார்.

"குதிரை வேகமாக ஓடுகிறது" என்று சொல்லி டயறியில் தட்டி குதிரை ஓடும் ஒலியை எழுப்பியிருக்கிறார்.

பின்னர் "இப்பொழுது குதிரை நடக்கிறது" எனச் சொல்லி குதிரையின் மெதுவான நடையையும் அந்த டயறியிலேயே மெதுவாகத் தட்டித் தட்டி காண்பித்திருக்கிறார். குதிரையின் கதையையும் சொல்கிறார்.

பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை வானொலி கலையகத்தில் வானொலி மாமா இவருக்கு நடத்திய நேர்முகத்தேர்வில், தான் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டேன் என்பதை இந்த கதைசொல்லிக் கலைஞர் அன்று 2019 இல் நினைவு மறதியின்றி எம்முன்னே அபிநயத்துடன் ஒரு டயறியில் தட்டி குதிரை ஓடும், நடக்கும் ஒலியலைகளை எழுப்பி வியப்பில் ஆழ்த்தினார்.

மாஸ்டர் சிவலிங்கம் மஹா பாரதக்கதையை மாணவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் தனி நூலாக அழகிய வண்ணப்படங்களுடன் வெளியிட்டிருக்கிறார். இதுவரையில் இந்த நூல் மூன்று பதிப்புகளைக் கண்டு விட்டது.

"தனித்துவத்துக் கொரு உருவம் மாஸ்டர். நல்ல
தங்குபுகழ்க்கொரு உருவம் மாஸ்டர். வல்ல
இனித்தகதைக் கொருஉருவம் மாஸ்டர். நீங்கா
எளிமைக்கும் பண்புக்கும் மாஸ்டர்.



நனிபுனைந்த கதைகளெலாம் நூல்களாக
நாம் கண்டு சுவைக்கின்ற நற்பேறுற்றோம்.
இனியென்ன, நீங்களும்தான் வாங்கி வாங்கி
இனித்தினித்துப் படிப்பதற்கும் இடையூறுண்டோ...? "

என்று இந்த நூலை வாழ்த்தி வரவேற்றுள்ளார் கவிஞர் திமிலைத்துமிலன். மாணவர்களுக்கும் குழந்தைகளுக்கும் கதைசொல்லும் ஆற்றல் கைவரப்பெற்று விளங்கிய மாஸ்டர் சிவலிங்கம் பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் முதலான நூல்களையும் வரவாக்கியவர்.

ஊடகத்துறையிலும் ஈடுபட்டிருந்த மாஸ்டர் சிவலிங்கம் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர். அன்னாரின் ஆத்மாவுக்கு நெஞ்சார்ந்த அஞ்சலி.



**லெ.முருகபூபதி...**
*(ஊடகவியலாளர், எழுத்தாளர்)*
*அவுஸ்திரேலியா*

# வளர்ச்சிப்படியில் விரைவாக முன்னேறிச் செல்லும் மருதமுனை அல்–ஹிக்மா ஜூனியர் பாடசாலை



**மருதமுனை அல்ஹிக்மா ஜூனியர் பாடசாலை ஏற்பாடு செய்த வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் அதிபர் எம்.எல்.முஹம்மட் மஹ்றூப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.**

2018ஆம் ஆண்டு பாடசாலையில் பிரமாண்டமான முறையில் பரிசளிப்பு மற்றும் மாணவர்களின் கலாசார நிகழ்சிகளும் அரங்கேற்றப்பட்டன. அதன் பின்னர் கடந்த 3 ஆண்டுகளாக அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பரிசளிப்பு விழா நடைபெறவில்லை. இம்முறை பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில், 2019, 2020, 2021, ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்த மாணவச் செல்வங்கள் பதக்கம், பரிசு மற்றும் நினைவுச் சின்னங்கள், வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் நிலை மாணவர்கள் சிறப்பு நினைவுப் பரிசுகள் மற்றும் கிரீடம் அணிவிக்கப்பட்டு அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மருதமுனை அல்ஹிக்மா ஜூனியர் பாடசாலை 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பப் பாடசாலையாக மருதமுனையின் மேட்டுவட்டை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை பாடசாலையின் அதிபராக எம்.எல். முஹம்மட் மஹ்றூப் கடமையாற்றி வருகின்றார். பல்வேறு சவால்களை எதிர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை குறுகிய காலத்தில் மிகச் சிறந்த பெறுபேற்றை பெற்று சாதனை புரிந்து வருகின்றது.

பாடசாலையின் முதலாவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு 2018ஆம் ஆண்டு வெளியாகியிருந்தது. இது கல்முனை கல்வி வலயத்தில் முதலிடம் என்ற சாதனையை பெற்றுத் தந்தது. இதில் 52 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 19 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததுடன், அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று வலயத்தில் நூறு வீத சித்தி என்ற சாதனையைப் பெற்றது.

2019ஆம் ஆண்டு 67 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி அதில் 14 மாணவர்கள் சித்தியடைந்து கல்முனை வலயத்தில் இரண்டாம் இடத்தை இப்பாடசாலை பெற்றது. 2020 ஆம் ஆண்டு 67 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 12 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். 2021 ஆம் ஆண்டு 71 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 13 மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு புகழை பெற்றுத் தந்தனர்.

பாடசாலையின் சிறப்பான கற்பித்தல், மாணவர்களின் ஒழுக்கம், பௌதீக வளம், பாடசாலையின் அமைவிடம், சுற்றுச்சூழல் என பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அயல் கிராமங்களில் இருந்தும் பாடசாலை நோக்கி மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்து கொள்கின்றனர். வெறும் 54 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் இம்முறை 2022 ஆம் ஆண்டுக்கான கல்வியாண்டுக்கு மாத்திரம் 97 மாணவர்கள் இப்பாடசாலையில் இணைந்துள்ளனர்.



2022ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பு செயல்முறை பாடசாலைகளாக நாடளாவிய ரீதியில் 200 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றில் மருதமுனையில் அல் ஹிக்மா பாடசாலை தெரிவு செய்யப்பட்டமை அதன் சாதனைக்கு கிடைத்த வெற்றியாகும்.

பாடசாலை அதிபர் மற்றும் அபிவிருத்திக் குழுவினர், அபிமானிகள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியினால் 2020 ஆம் ஆண்டு பாடசாலையின் பௌதீக வளத்திற்கான 3 மாடிக் கட்டடம் மெர்சி லங்கா (Mercy Lanka) தொண்டு நிறுவனத்தினரால் வழங்கப்பட்டது.

இவ்வாறு பல்வேறு உதவிகளையும் பெற்று வளர்ச்சி அடைந்து வரும் பாடசாலை கல்முனை கல்வி வலயத்தில் மிகச்சிறந்த முன்னுதாரண பாடசாலையாக திகழ்வது வலயத்திற்கு மாத்திரமல்ல கல்விச் சமூகத்திற்கே பெருமைக்குரிய ஒன்றாகும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உயர்ந்து நிற்கும் இப்பாடசாலையில் இம்முறை நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் மாணவர்களை ஆற்றுப்படுத்தி சாதனைக்கு உரமூட்டிய ஆசிரியர்களும் அதிதிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எம்.எச்.எம். ஜாபீர், கணக்காளர் வை.கபீ புல்லா ஆகியோரும் விசேட அதிதிகளாக மருதமுனை ஸம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான், பிரதி அதிபர் எம்.பி.ஏ. ராஜி, முன்னாள் அதிபர் ஏ.எல்.சக்காப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் விழாவை அழகுபடுத்தி இத்துடன் மாணவர்களின் கல்வி முயற்சி குறித்து சிறப்புரை நிகழ்த்தினார் இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

## கட்சி சாராத அரசுக்கு ...

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையை முழுமையாக அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும் அதனைப் பயன்படுத்த வேண்டுமெனவும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கட்சி சாராத அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்குமாறு கேட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய கடிதத்துக்கான பதில் கடிதத்திலேயே ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பையேற்று, சவால் மிக்க தருணத்தில் பிரதமர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீளும் நோக்கில் பல்வேறு நாடுகளுடனும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்பாடல்களுக்கும் தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

## பவித்ரா, கணவர்...

இரவு அங்கிருந்து வெளியேறினர்.

கடந்த 09 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இந் நபர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## IMF உடனான பேச்சு...

கடமைப்பட்டுள்ளோம், மேலும் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியை சரியான நேரத்தில் தீர்க்க சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனங்களுக்கு மட்டுமே...

தமது எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து கலன்கள், பீப்பாய்கள் அல்லது போத்தல்களில் பெற்றோல் வழங்கப்படமாட்டாதென லங்கா, ஐஓசி தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா, ஐஓசி தெரிவித்துள்ளது.

## 20 வயதுக்கு மேற்பட்ட...

கேட்டுக் கொண்டுள்ளார்.

தடுப்பூசிக்கு தகுதியுடையவர்கள் குறைந்தபட்சம் 20 வயதுடையவர்களாக இருக்க வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்பு அவர்களின் முந்தைய கொவிட்19 தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும். எவ்வாறாயினும், நான்காவது தடுப்பூசியை 20 முதல் 60 வயதுடைய பெரியவர்களுக்கும், அதேபோல் நோயெதிர்ப்பு குறைபாடு உள்ளவர்களுக்கும் பரிந்துரைக்கப்படுவதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி அரசின்...

அமைச்சராகவும் மனுஷ நாணயக்கார,தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ரமேஷ் பத்திரன,பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவும், நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பெர்னாண்டோ, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சராகவும் டிரான் அலஸ், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு, சீர்திருத்த அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ, சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோர் நேற்று தங்களுடைய அமைச்சுகளில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

## பஸ்களுக்கு சேதங்களை...

சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கொழும்பில் (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், பஸ்களை சேதப்படுத்திய அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, மார்ச் மாதம் 31 ஆம் திகதி மிரிஹானயில் இடம்பெற்ற போராட்டத்தின்போது, இராணுவத்தின் பஸ்சுக்கு தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இந் நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் தெரணியகலை பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் வாகன உதிரிபாக விற்பனை நிலையமொன்றில் பணியாற்றுபவரென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

## Unicef, WFP ஊடாக ஜப்பான்...

வழங்கவுள்ளது, அவர்களில் 53,000 கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஏறக்குறைய 1,22,000 குழந்தைகள் உடனடித் தேவையுள்ளவர்களாக உள்ளனர். சுகாதார அமைச்சுடன் இணைந்து இலங்கை முழுவதுமுள்ள சுகாதார நிலையங்களுக்கு இந்த மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இலங்கைக்கான ஜப்பானின் இடைக்கால பொறுப்பாளர் கட்சுகி கோட்டாரோ, "இலங்கை மக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் 25 வகையான மருந்துகளை வாங்குவதற்கு ஜப்பான் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர உதவியை வழங்குவது எங்களுக்கு பெருமையாகும். UNICEF மூலம் அடுத்த இரண்டு மாதங்களில், பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய சாத்தியமுள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அத்தியாவசிய உயிர்காக்கும் மருத்துவ சேவைகளை வழங்க உதவுமென்று நாம் நம்புகின்றோம்.

இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கைக்கு உதவுவதற்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை (600 மில்லியன் ரூபா) வழங்குவதாக ஜப்பான் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இந்த நிதி ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தினால் (WFP) குழந்தைகள் மற்றும் ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கு உணவு உதவி வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.





மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பாலத்தில் அமைந்துள்ள பொலிஸ் மற்றும் இராணுவப் படையினர் இணைந்த வீதிச் சோதனைச் சாவடியில் அதி நவீன கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டு (18) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.அபேயவிக்கிரமவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கமல் சில்வா, மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தினேஸ் கருணாநாயக்க, மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி சுதத் மாசிங்க களுவாஞ்சிகுடிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ஜெயரத்ன உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்துள்ளனர்.






யு.எஸ்.ஐட் நிறுவனத்தின் உதவியுடன் லிப்ட் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் காணி மத்தியஸ்தம் ஊடாக சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் எனும் செயற்பாட்டில் காணிப்பிணக்குகளுக்கான விசேட மத்தியஸ்த முயற்சிகள் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் மங்களகம பிரதேசத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபையின் தவிசாளர் க.குருநாதன், உதவி தவிசாளர் என்.இளஞ்செழியன் மற்றும் காணி மத்தியஸ்த சபையின் உறுப்பினர் ஏ.வீ.எம்.முஸ்தபா ஆகியோரின் வழிகாட்டலில் குறித்த செயற்திட்டம் இடம்பெற்றது. பெறப்பட்ட 35 பிணக்குகளுக்கான விசாரணைகள் இடம்பெற்று சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

## எரிப்பொருள், கேஸ், நீர்,...

இருப்பதாகவும், அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதில் ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமானதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்காகவே பதவி...

தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கையை கட்சி மேற்கொள்ளுமானால் அதற்கு முகம்கொடுக்க தான் தயார் எனவும் குறிப்பிட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்து ஒரு சதவீதம் கூட தான் பின்வாங்கவில்லையென தெரிவித்த ஹரீன் பெர்ணான்டோ, தானும் ரணிலும் ஒரே படகில் தற்போது இருந்தாலும் புயலில் சிக்கியுள்ள கப்பலை கரைக்கு கொண்டுவருவதே தமது நோக்கமென தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசியலில் ஒன்றிணைந்து பயணிப்பதற்காக இந்த பதவியை ஏற்கவில்லை. நாட்டின் நிலைமையை கருத்திற்கொண்டே இதை பொறுப்பேற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பயணிகள் விமானத்தில்...

தரையிறங்கியது. இதன்போது விமானி இருக்கும் பகுதி நோக்கி லேசர் ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது.

சரியாக விமானியின் கண்களுக்கு அடிக்கும் விதமாக இந்த ஒளி பாய்ச்சப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த லேசர் ஒளி அதிக ஆற்றலுடன் இருந்ததாக கூறப்படுகிறது.

இரண்டு விமானிகளையும் நோக்கி இந்த ஒளி அடிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. எனினும் விமானிகள் எந்த பிரச்சினையும் இல்லாமல் கவனமாக விமானத்தை தரையிறக்கி உள்ளனர். விமானம் இதனால் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

இந்த நிலையில் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விமான நிலைய அதிகாரிகள் மூலம் கண்ட்ரோல் ரூம் அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து உடனே விசாரணை நடத்தப்பட்டது.

அதன்படி பழவந்தாங்கல் பகுதியிலிருந்து இந்த லேசர் ஒளி வந்திருக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. விமான நிலையத்தில் இருந்து 02 கிலோமீற்றர் தொலைவிலிருந்து இந்த ஒளி வந்துள்ளது தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற சம்பவம் ஐந்து வருடங்களுக்கு முன்னரும் இடம்பெற்றதால், இருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஹரீன் மனுஷவுக்கு எதிராக...

லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்த கூற்று ஒன்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாந்த பண்டார எம்.பி. அது தொடர்பில் சபையில் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளமையை வரவேற்பதாக தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கையிலேயே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கத்தில் இணைந்துகொள்வது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கையல்ல. நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நாம் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு, அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானித்தோம். அதுதொடர்பில் எழுத்து மூலமாக அரசாங்கத்துக்கு தெரிவித்திருக்கின்றோம்.

இத்தகைய நிலையில் தற்போது எமது கட்சியிலிருந்து சிலரைப் பெற்றுக்கொண்டு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு கட்சியிலிருந்து விலகி அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொண்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கலவரத்தின் வலியை... (03 ஆம் பக்கத் தொடர்)

நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படும் நிலை இருப்பதாக பிரதமர் தெரிவித்திருந்தார். அவ்வாறான நிலை ஏற்பட்டால் பெருந்தோட்ட மக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

அதனால் பெருந்தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களை அங்குள்ள மக்களுக்கு மக்களுக்கு பகிர்ந்தளித்து விவசாய செயற்பாடுகளுக்கு உதவ வேண்டும்.

## மாலை 6.30 மணிக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

தவிர்க்குமாறு ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

மே மாதம் 21, 22 மற்றும் 29 ஆம் திகதிகளில் மாலை 06 மணிக்குப் பின்னர் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாதென ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கையின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு இந்த சந்திப்பின் போது இ.தொ.கா நன்றி தெரிவித்துள்ளதுடன், தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து இலங்கையை மீண்டெழ இந்திய அரசாங்கத்தின் ஒத்தழைப்பும் உதவியும் அதிகமாக தேவைப்படுகிறது.

அதேபோன்று இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் அதிகமாக இந்த பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.எனவே இந்தியா அவர்களுக்கு பொருளாதார ரீதியான உதவிகளை வழங்க வேண்டும் என்பதுடன், இலங்கை நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அனைத்து விதத்திலும் இந்திய அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டுமெனவும் இந்த சந்திப்பில் இ.தொ.கா இந்திய நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.இக்கோரிக்கைக்கு சாதகமான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் இந்தியா முன்னெடுக்கும் என இந்திய நிதி அமைச்சர் நிர்லமா சீதாராமன் தெரிவித்தார்.'

## இலங்கைக்கு கடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை கடன்களை திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளதையடுத்து, இலங்கைக்கான உதவிகளை வழங்க ஜி7 நாடுகள் ஊக்குவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடனான வினைத்திறனான பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அத்துடன் இலங்கைக்கு கடன் வழங்கிய செல்வந்த நாடுகள், கடன் நிவாரணத்தை வழங்க வலியுறுத்தப்படுவதுடன், பெரு நன்கொடை அமைப்பான 'பரிஸ்க்லப்' ஊடாக இலங்கைக்கு உதவிகளை வழங்கவும் ஜி7 நாடுகள் எதிர்ப்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சி தீர்மானத்தை மதிக்க... (03 ஆம் பக்கத் தொடர்)

நேர்மையாக நடக்கக் கூடியவர். அவரின் கொலையையும் ஏனைய கொலைகளையும் கண்டிக்கிறோம்.

நாட்டின் பொருளாதார நிலையை பற்றி பிரதமர் வெளியிட்ட கருத்துக்களையடுத்து மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

அத்தியாவசிய பொருள் விநியோகம் சில வாரங்களில் பாதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 30 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றம் இவ் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் பொதுவான நிலைப்பாட்டுக்கு வர இன்று வரை முடியாதுள்ளது.

விவசாயிகளுக்கு பசளை இதுவரை கிடைக்கவில்லை. இயந்திரங்களுக்கு எரிபொருள் இல்லை. அருவடை வீழ்ச்சியடைந்துள்ளது. துர்ப்பாக்கியமான நிலை உருவாகி வருகிறது. உணவு மற்றும் மருந்து பிரச்சினைக்கு துரித தீர்வு காண வேண்டும்.

மக்கள் எதிர்பார்ப்புகள் இழந்து கண்ணீர்வடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்கள் கூட எரிபொருள் வரிசையில் இருக்கிறார்கள்.வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின் போது ஒன்றுபட்டு செயற்பட்டது போன்று கட்சி பேதமின்றி இணைந்து செயற்பட வேண்டும்.

தேசிய சபை ஒன்றை உருவாக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. முன்பிருந்த அரசே மீள உருவாகும் என தோன்றுகிறது. அவ்வாறான நிலையால் மக்கள் அதிருப்தி அடைவர்.

பிரதமருக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முறுகல் நிலை காணப்படுகிறது. அமைச்சு பதவி ஏற்க நாம் முடிவு செய்திருக்கவில்லை. அரசுக்கு ஒத்துழைக்கவே மத்திய குழு முடிவு செய்தது என்றார்.

## ஆகஸ்ட் முதல் இலங்கையில்...

விலகவேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதையடுத்து தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். ஊழல் மற்றும் பொருளாதாரத்தை தவறாக கையாண்டதாக பொதுமக்கள் அரசாங்கத்தின் தலைமை மீது குற்றம்சாட்டினர். தலைநகரில் இரண்டு மாதங்களுக்கு மேல் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. முன்னைய நிர்வாகத்தின் பொருளாதாரத்தை வீழ்த்தியதால் தற்போதைய நெருக்கடிக்கு அவர்கள் மீதே குற்றம் சுமத்தவேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாங்கள் வங்குரோத்து நிலைக்கு வந்துவிட்டோம். இலங்கையின் வரலாற்றில் இது ஒருபோதும் நிகழ்ந்ததில்லையென ஸ்கை நியூஸுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். பிரதமர் கடந்த வாரம் பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு தெரிவித்திருந்தார். எங்களிடம் டொலர்கள் இல்லை, ரூபாய் இல்லையென அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பதவி விலகவேண்டுமா? என்ற கேள்விக்கு இது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். இந்த விடயத்தில் நாட்டில் இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றதென பிரதமர் தெரிவித்தார். இலங்கை 21ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் பாராளுமன்றத்தை மீண்டும் வலுப்படுத்தும் 19ஆவது திருத்தத்தை நாடு மீண்டும் கொண்டு வரவேண்டுமென்ற யோசனையை முன்வைத்திருக்கின்றேன். இது பிரதமரின் அதிகாரங்களை வலுப்படுத்தும் நடவடிக்கையென பிரதமர் தெரிவித்தார். அதன் பின்னர் அனைத்து கட்சித் தலைவர்களும் ஜனாதிபதியும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு எதிர்காலம் குறித்த ஏற்பாடொன்றுக்கு வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். 1948 இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் நாடு சந்தித்துள்ள மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு கொவிட்19 ,எண்ணெய் விலை அதிகரிப்பு, ஜனாதிபதியும் முன்னைய பிரதமரும் பின்பற்றிய வரிநடைமுறைகள் ஆகியவையே காரணமென தெரிவிக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டக்காரர்களின் வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடியும். முதியவர்களும் இளையவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இளையவர்கள் தங்கள் எதிர்காலம் பறிபோவதாக கருதுகின்றனர். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த முதியவர்கள் தங்கள் வாழ்க்கை முறை வீழ்ச்சியடைவதாக கருதுகின்றனர். உரமில்லாத விவசாயிகளும் உள்ளதாக அவர் தெரிவித்தார். பொலிஸ் நிலையங்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் வெளியேயும்,வேறு இடங்களிலும் பல ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இது மக்களின் சீற்றம் விரக்தி நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றதென அவர் தெரிவித்தார்.

மக்கள் தற்போது இதற்கு மேலும் சுமையை சுமக்க முடியாத நிலையிலுள்ளனரெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாங்கள் நிச்சயமாக ஸ்திரமான நிலையில் இல்லையென்றும் பிரதமர் குறிப்பிட்டார். மே 9ம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை சேதப்படுத்தி தீயிட்டு சூறையாடிய 800க்கும் அதிகமானவர்களை கைது செய்துள்ளதாக பொலிஸ் துறையினர் தெரிவித்துள்ளனர்.

போதியளவு உரம் இன்மையால் நாடு உணவு நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடுமெனவும் பிரதமர் தெரிவித்தார். வெளிநாட்டு நெருக்கடி காரணமாக 07 பில்லியன் டொலர் கடனை செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளதை தொடர்ந்து இலங்கை வங்குரோத்து நிலையை அடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இலங்கை இறக்குமதியை மட்டுப்படுத்தியுள்ளது. நாங்கள் எரிபொருள் விலை அதிகரிப்பின் தாக்கத்தை உணர்கின்றோம். இது இன்னமும் அதிகரிக்குமென கருதுகின்றோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

விவசாயத்துக்கான போதிய உரம் இல்லை என்பதே எங்கள் முக்கிய கரிசனை. எதிர்வரும் பருவகாலத்தில் முழுமையான விளைச்சல் கிடைக்காதென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதன் காரணமாக ஆகஸ்ட் முதல் இலங்கையில் உணவு நெருக்கடிக்கான சாத்தியம் உள்ளது. அக்காலப்பகுதியிலேயே உலக உணவு நெருக்கடி உருவாகும்.அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை எப்படி எதிர்கொள்ளப்போகின்றோமென பார்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## எரியும்நெருப்பில் வைக்கோல்...

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் உக்கிரமடைந்துள்ளது. மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது எவ்வாறு என்பது தொடர்பிலேயே பாராளுமன்றத்திலுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும். இனியும் அரசியல் நோக்கங்களுக்காக ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டிக் கொண்டு செயற்பட முற்படக்கூடாது. அவ்வாறானால் நாம் விஜயன் காலத்திலிருந்தே அதை செய்ய வேண்டிவரும். நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கையுடனேயே நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். நம்பிக்கையுடனேயே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தனர். நான் அமைச்சர் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்னர் 42 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையை செலுத்திவிட்டே பதவியை பொறுப்பேற்றேன். அரசியல் மூலம் நான் ஒரு சதம் கூட உழைக்கவில்லை. ஆனால் வீடு எரிவதைப் பார்த்து மகிழ்ச்சியடையும் தரப்பினரையும் நான் பார்க்கின்றேன். அந்தளவு மோசமான கலாசாரம் எமது நாட்டில் தலைதூக்கி இருக்கின்றது.

இதன் பின்னர் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு நான் நினைக்கமாட்டேன்.

நாட்டில் வருமான வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும். சுங்கத் திணைக்களத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். நாட்டின் வருமான வழிமுறைகள் தொடர்பில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.




# காலிமுகத்திடல் நினைவேந்தலுக்கு என்னுடைய மரியாதையை செலுத்துகின்றேன்

காலிமுகத்திடலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விற்கு என்னுடைய மரியாதையைப் பதிவு செய்கின்றேன் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (19.04.2022) இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை இந்திய ஒப்பந்த நடைமுறைகளை சரியான திசைவழி நோக்கி நகர்த்தி செல்லும் உரிமை எமக்கு அன்று வன்முறை செயற்பாடுகளால் மறுக்கப்பட்டிருந்தாலும் அந்த ஒப்பந்த நடைமுறைகளில் நாம் பங்கெடுக்காது போயிருந்தாலும், அன்றிலிருந்து வன்முறை வழிமுறையின் ஊடாக எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட முடியாது என்பதை எமது கட்டாய கட்டளைகளாக நாம் ஏற்றுக்கொண்டவர்கள். சாதாரண மக்களின் உணர்வுகளை நான் என்றும் மதிப்பவன்.



அமைதி வழியில் போராடும் சுதந்திரம் எவருக்கும் உண்டு. ஆனாலும் வன்முறைகள் எந்த வடிவத்தில் யாரால் முன்னெடுக்கப்பட்டாலும் அவைகள் குறித்து நான் விமர்சனங்களை முன்வைப்பவன்.

அண்மையில் நடந்த வன்முறைகளின் போது கொல்லப்பட்ட சிங்கள சகோதர மனித உயிர்களுக்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன். தாக்கப்பட்டு, காயப்பட்டு, உடமைகளை இழந்தும் இருப்போருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

இதேவேளை, எமது மக்களின் நீதியான உரிமைப்போராட்டத்தில் தகுதியான அனைத்து விடுதலை இயக்க போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்துகின்றேன்.

தமிழ் மக்களின் உரிமைப் போரின் பெயரால் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளின் போதும், மாறி மாறி நடந்த இனக் கலவரங்களின் போதும் மரணித்த அனைத்து உயிர்களையும் நினைவு கூருகின்றேன்.

யுத்தத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது எமது மக்களின் ஜனநாயக உரிமை. அதை நான் ஒருபோதும் மறுத்ததில்லை. ஆனாலும் இறந்த மனித உயிர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்று கூறிக்கொண்டு, எமது மக்களின் அழிவுகளை வைத்து அதில் அரசியல் பிழைப்பு நடத்துவதை நான் ஒரு போதும் ஏற்கபோவதில்லை.

யுத்தத்தில் இறந்த சகல மக்களையும் நினைவு கூருவதற்கும் அவர்களின் மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை 2016 ஆம் ஆண்டு இந்த உயரிய சபையில் தனிநபர் பிரேரணையாக நான் கொண்டு வந்திருந்தேன்.

துரதிஷ்டவசமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது ஓடி ஒளித்துவிட்டார்கள். ஆனால் அதிஷ்டவசமாக தென்னிலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிநபர் பிரேரணையை நிறைவேற்றித்தந்திருந்தார்கள்.

அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், என்னுடைய அந்த விருப்பத்தினை பிரதிபலிக்கும் வகையில், இறுதி யுத்தத்தில் சகல மக்களையும் சகல மக்களும் நினைவுகூரும் வகையில் காலிமுகத் திடலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்விற்கும் என்னுடைய மரியாதையைப் பதிவு செய்கின்றேன்.

அழிவு யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீருக்கும் பரிகாரம் தேடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

கடும் காற்று

## தீத்தக்கரை வேளாங்கண்ணி மாதா கோயில் சேதம்



முல்லைத்தீவு தீத்தக்கரை பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக தீத்தக்கரை வேளாங்கண்ணி மாதா கோயில் சேதமடைந்துள்ளது. முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீத்தக்கரை பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக தீத்தக்கரை வேளாங்கண்ணி மாதா கோயில் சேதமடைந்துள்ளது. இப்பகுதியில் சற்று முன்னர் வீசிய கடும் காற்று காரணமாக கட்டுமான பணிகள் இடம்பெற்று வந்த தீத்தக்கரை வேளாங்கண்ணி மாதா ஆலயத்தின் கட்டடத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.

## சமுர்த்தி அலுவலகர் தொடர்பில் பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலகரினால் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாக ஐந்து கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பட்டாணிச்சூர் பகுதியில் கடமையாற்றி வரும் சமுர்த்தி அலுவலரினால் சமுர்த்திப் பயனாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு உட்பட பயனாளர்கள் தெரிவு போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன. இது குறித்து பல ஆதாரங்களுடன் பிரதேச செயலாளர் உள்ளிட்ட சமுர்த்தி வங்கி முகாமையாளர், சமுர்த்தி மகாசங்க முகாமையாளர், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் மாவட்ட அரசாங்க அதிபர் போன்றவர்களிடம் நேற்று முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு வறுமைப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் பயனாளர்கள் தெரிவில் இடம்பெற்றுவரும் முறைகேடுகளை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளோம்.

## காலிமுகத்திடல் நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணம்



(பரந்தன் குறூப் நிருபர்)

விசுவமடுவிலிருந்து காலிமுகத்திடல் நோக்கி குடும்பஸ்தர் ஒருவர் துவிச்சக்கர வண்டியில் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று காலை விசுவமடு சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பயணத்திற்கு மக்கள் தமது ஆதரவினை வழங்கினர். கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசரத்தினம் ஜனகவர்மன் என்ற 32 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு பயணத்தை ஆரம்பித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரியும், பொருளாதார நெருக்கடி தொடர்பில் கோட்டா கோ கம போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நான்கு நாட்கள் துவிச்சக்கர வண்டியில் பயணித்து சென்றடையவுள்ளார்.

## நெடுந்தீவு கடற்போக்குவரத்து தொடர்பில் கலந்துரையாடல்





யாழ்.விசேட நிருபர்

நெடுந்தீவு பிரதேசத்திற்கான கடற்போக்குவரத்து மற்றும் அதனுடன் கூடிய பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

வடதாரகை படகு பழுதடைந்துள்ள நிலையில் அதற்கு மாற்றீடாக போக்குவரத்து படகுகளை பயன்படுத்தல் மற்றும் கடற்போக்குவரத்தில் ஈடுபடுகின்ற படகுகளுக்கு சான்றிதழ்களை பெறுதல், போக்குவரத்துக்கான நேர அட்டவணைகளை ஒழுங்கமைத்தல், படகு சேவைகளின் போது பயணிகளுக்கு பாதுகாப்பு அங்கி அணிதல் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குதல் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும், இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், உதவி மாவட்ட செயலாளர், நெடுந்தீவு உதவி பிரதேச செயலாளர், நெடுந்தீவுக்கான கடற்படை தலைமை அதிகாரி, நெடுந்தீவுக்கான கடற்படையினர், பொறியியலாளர் (RDO), நெடுந்தீவுக்கான படகு உரிமையாளர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு தானம் வழங்கும் நிகழ்வு



பருத்தித்துறை விசேட நிருபர்

வெசாக் தினத்தை முன்னிட்டு பொது அமைப்புக்களினால் யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு தானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஒவ்வொருவருடமும் வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நாக விகாரையில் வசிக்கின்ற பௌத்த துறவிகளுக்கு தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. நேற்றைய வருடமும் நாக விகாரையில் அமைந்துள்ள இந்து, பௌத்த ஸ்தலங்களில் பூஜை, வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு தானம் வழங்கி வைக்கப்பட்டன.

பௌத்த துறவிகளால் பிரித் ஓதுதல் வழிபாடும் இந்து பூசகரால் இந்து பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி சிதம்பரம் மோகன், கலாநிதி ஆறுதிருமுருகன் மற்றும் பௌத்த துறவிகள், இந்து குருமார்கள் ,யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் பலி

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியில் வடக்கு வரணி கறுக்காய் பகுதியில் நேற்று மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், மந்திகையைச் சேர்ந்த அருந்தவராசா அஜந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தார். அவரின் சடலம், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிவாயு பிரச்சினை வீதியினை வழிமறித்து மக்கள் போராட்டம்



வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் எரிவாயு கோரி ஏ 9 வீதியினை வழிமறித்து நேற்று (20.05) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையினால் அப்பாதையூடான போக்குவரத்து அரை மணித்தியாலயம் வரை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக எரிவாயு இல்லாமையினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று (20.05) காலை தொடக்கம் மாவட்டத்தில் இரு இடங்களில் எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவந்ததுடன்,வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள எரிவாயு விநியோகஸ்தர் நிலையத்திலும் அதிகாலை தொடக்கம் மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

எனினும் பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள எரிவாயு விநியோகஸ்தர் நிலையத்தில் எரிவாயு வழங்கப்படமாட்டது என தெரிவித்துள்ளனர். இதனால் கோபமுற்ற மக்கள் ஏ 9 வீதியில் எரிவாயு சிலிண்டர்களை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன், பொலிஸார் வீதியிலிருந்த எரிவாயு சிலிண்டர்களை அகற்றியதுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் அகற்றினர். இதன்போது பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கிடையே கடும் தர்க்க நிலையும் ஏற்பட்டிருந்தது.

## கல்வியலாளர்கள் ஆளுமை மிக்கவர்களுக்காகவே தேசிய பட்டியல் முறைமை ஏற்படுத்தப்பட்டது

### சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன்

கோப்பாய் குறூப் நிருபர்

ஜனநாயக தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஒருவரை தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக்குவது அரசியல் விரோத செயலாகும் என யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் தெரிவித்தார்.

நேற்று (19) வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச சார்பற்ற நிறுவனமான சொண்ட் நிறுவனம் ஏற்பாடு செய்த நாட்டின் புதிய ஆட்சி மலர்வதற்கான மக்களின் பங்களிப்பு எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய பட்டியல் ஆசனம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதனூடாக யார் வேண்டுமென்றாலும் வரலாம் என கூறப்படாவிட்டாலும் கல்வியலாளர்கள் ஆளுமை மிக்கவர்களை அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்காகவே தேசிய பட்டியல் முறைமை ஏற்படுத்தப்பட்டது.



ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையிலுள்ள எந்தவொரு நீதிமன்றமும் தேர்தலில் தோற்றவர்கள் தேசியப்பட்டியலூடாகப் பாராளுமன்றம் செல்வது அ ர சி ய ல மை ப் பு க் கு முரண் என எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. இலங்கை அரசியல் அமைப்பு தொடர்பில் சில விடயங்களை பொருள்கோடல் மூலம் உணர்த்துவதற்கு நீதிமன்றங்கள் முனைந்தாலும் அவ்வளவு தூரம் நீதிமன்றங்களுக்கு சுயாதீனம் இருக்கவில்லை.

இலங்கையில் காணப்படுகின்ற நிறைவேற்று ஜனாதிபதி அரசினுடைய தலைவர், அரசாங்கத்தினுடைய தலைவர், முப்படைகளில் உடைய தலைவர், அமைச்சரவை உடைய தலைவர் என எல்லையற்ற அதிகாரம் உள்ள ஒரு தலைவராக காணப்படுகிறார். அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தல், யுத்தத்தை பிரகடனம் செய்தல் ஆகியவற்றிற்கு யாரையும் கலந்து ஆலோசிக்காமல் ஜனாதிபதியே முடிவெடுக்க கூடிய அதிகாரத்தை 78ஆம் ஆண்டு அரசியலமைப்பு வழங்கியுள்ளது.

எனினும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பில் பாராளுமன்றத்தின் அனுமதி தேவையாக இருந்தாலும் பிறப்பிக்கும் போது யாரையும் கேட்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை. 78 ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் சட்டவாக்கத்துறையான பாராளுமன்றத்திலும் நிறைவேற்றுத் துறையின் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் காலம் நாலரை வருடங்களாக கொண்டுவரப்பட்டாலும் 20 ஆவது திருத்தத்தின் மூலம் இரண்டரை வருடங்களாகக் குறைக்கப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பாராளுமன்றத்தை நிறைவேற்று ஜனாதிபதி கலைப்பது எமது அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதியால் முடியுமே தவிர அவரைப் பதவி நீக்குவதற்கு முடியாது.




# மலையகப் பகுதிகளில் எரிபொருள் விநியோகம் நேற்றுமுதல் ஆரம்பம்

## பல கிலோமீற்றர் தூரம் நீண்ட வரிசை

**ஹற்றன் விசேட நிருபர்**





மலையகப்பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மூன்று நாட்களுக்கு பின்னர் பெற்றோல், டீசல் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல கிலோமீற்றர் தூரம் பெற்றோல் பெற்றுக்கொள்வதற்காகவும் டீசல் பெற்றுக்கொள்வதற்காகவும் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று தினங்களாக மலையக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாரிய பெற்றோல் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனால் முச்சக்கரவண்டி சாரதிகள், கூலி வாகன ஓட்டுனர்கள் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாரிய நெருக்கடிக்கு இவர்கள் முகங்கொடுத்திருந்தனர். ஒரு சில வாகனங்கள் கடந்த சில தினங்களாக எண்ணெய் நிரப்பு நிலையங்களுக்கு அருகாமையிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் கொட்டகலை, ஹற்றன், தலவாக்கலை உள்ளிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகம் இடம்பெற்றதை தொடர்ந்து வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன. எரிபொருள் இன்மையால் சுயதொழிலில் ஈடுபவர்களும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் தங்களது தொழிலை செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. பாரிய நஷ்டத்தினை எதிர்நோக்கியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஒருசில எண்ணெய் நிரப்பு நிலையங்களில் வரிசையில் இருந்து விலகி முண்டியடித்து பெற்றோல் நிரப்ப முற்பட்டமையால் அமைதியற்ற சூழல் உருவானது. அதனைத் தொடர்ந்து பொலிஸார் தலையீட்டு வாகனங்களை ஒழுங்குபடுத்தி பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுத்தனர். எனினும், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வாகனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல் மற்றும் டீசல் பெற்றுக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



நுவரெலியா மாவட்ட பொது வைத்திய உதவியாளர்கள் கொடுப்பனவுகள், மருந்து தட்டுப்பாடு என்பவற்றை நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தி நுவரெலியா பொது வைத்திய சாலைக்கு முன்பாக நேற்று (20) வெள்ளிக்கிழமை நண்பகல் கோஷங்கள் எழுப்பிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# டெங்கு அவதானம்; கொதித்து ஆறிய நீரை அருந்துமாறு அறிவுறுத்தல்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்குகாய்ச்சல் பரவலாக அதிகரித்து வருவதாக பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

சப்ரகமுவ மாகாண சுகாதார அத்தியட்சகர் காரியாலய அறிவுறுத்தல்களுக்கு இணங்க பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம சேவை அதிகாரிகள் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக இந்த அவதானநிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் மக்களை அறிவுறுத்தி வருகின்றனர்.

இப்பகுதியில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக நீண்ட நாட்கள் நீர் தேங்கி நிற்பதாலும் இப்பிரதேசத்தில் இரத்தினக்கல் அகழும் தொழிலாளர்களால் கைவிடப்பட்ட குழிகளில் நீர்தேங்கி நிற்பதாலும் இந்நிலை இரட்டிப்பு அவதான நிலையை ஏற்படுத்துவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் கொதித்தாறிய நீரை அருந்துமாறும் பொதுமக்கள் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்னாள் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர் யுவதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் (19) வியாழக்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# இலங்கை தோட்ட சேவையாளர் சங்க தலைமைப்பதவிக்கு மனோகரன் போட்டி



**நுவரெலியா தினகரன் நிருபர்**

இலங்கை தோட்ட சேவையாளர் சங்க தலைமைப்பதவிக்கு மனோகரன் போட்டியிடவுள்ளார்.

இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 24 ஆவது பேராளர் மாநாடு இன்று (21.05.2022) கொழும்பில் நடைபெறுகின்றது. பேராளர் மாநாட்டில் தலைமைப்பதவிக்கு சங்கத்தின் முன்னாள் உப தலைவர் பொகவந்தலாவையை சேர்ந்த செல்லதுரை மனோகரன் போட்டியிடுகின்றார். இவர் 1997 ஆம் ஆண்டு முதல் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் உறுப்பினராக இணைந்து கொண்டார். அன்று முதல் சங்கத்தின் பல பதவிகளையும் வகித்து சங்கத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியுள்ளார்.

பிரதித் தலைவர் பதவிக்கு காலி மாவட்டத்தைச் சேர்ந்த அஜித் சிறிமானவும் பொருளாளர் பதவிக்கு துசார சரத்குமாரவும் இரண்டு உப தலைவர் பதவிக்காக பதுளையை சேர்ந்த ஜெகநாதனும் தலவாக்கலையை சேர்ந்த எஸ்.பத்மநாதனும் போட்டியிடுகின்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த செல்லதுரை மனோகரன்

எங்களுடைய இலங்கை தோட்ட சேவையாளர் சங்கமானது இலங்கையில் இருக்கின்ற மிகவும் பழமையான சங்கங்களில் ஒன்று. இச்சங்கத்தில் பெருந்தோட்ட துறையில் தொழில் புரிகின்ற தோட்ட சேவையாளர்களே அங்கத்தவர்களாக இருக்கின்றனர். எங்களுடைய சங்கத்திற்கும் பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தம் மூலமே அனைத்து விடயங்களும் தீர்மானிக்கப்படுகின்றது. கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் கடந்த காலங்களில் எங்களுடைய உறுப்பினர்களுக்காக குரல் கொடுத்து பல விடயங்களை பெற்றுக் கொடுத்திருக்கின்றேன்.

தற்பொழுது எமது சங்கத்தில் ஜனநாயகம் கேள்விக்குறியாகியுள்ளது. தனிமனித ஆதிக்கமும் சர்வதிகார போக்குமே சங்கத்தை நிர்வகித்து வருகின்றது. எனவே இதனை முறையடித்து ஜனநாயக நடைமுறைகளை கொண்டு வருவதற்காக அனைத்து அங்கத்தவர்களுடைய ஆதரவுடனும் இம்முறை எனது தலைமையிலான குழுவினர் களம் இறங்கியிருக்கின்றோம். எனவே இந்த பேராளர் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டு ஜனநாயக முறையிலான நிர்வாகத்தை முன்னெடுத்து எங்களுடைய உறுப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய பல உரிமைகளை பெற்றுக் கொடுக்க எங்களுடைய குழுவினர் முழு மூச்சுடன் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் எப்பொழுதும் ஏனையவர்களுக்கு விட்டுக் கொடுத்து சங்கத்தில் உப தலைவர்களாக மாத்திரமே செயற்பட்டு வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

# எரிவாயு சிலிண்டர்களால் போக்குவரத்துக்கு இடையூறு

**ஹற்றன் சுழற்சி நிருபர்)**



ஹற்றன் நகரிலுள்ள சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையங்கள் முன்பாக, பல நாட்களாக நீண்ட வரிசைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு வெற்றுச் சிலிண்டர்களால் பாதசாரிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். ஹற்றன் நகரில் சமையல் எரிவாயு விநியோகிக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட போதும் ஹற்றன் நகரிலுள்ள ஹோட்டல்களின் உரிமையாளர்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்களை நடைபாதையில் நீண்ட தூரத்துக்கு வைத்து ஒன்றை கயிற்றால் பிணைத்து கட்டிவைத்துள்ளனர்.

இதனால் நடைபாதையில் பயணிப்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக முதியவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹற்றன் நகரிலுள்ள சகல எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்பாகவும் ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தரகர்களைப் பயன்படுத்தி, சமையல் எரிவாயுவை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையால் சாதாரண பொது மக்கள் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



பதுளை மாவட்ட பொதுவைத்தியசாலை தாதியர் சங்கத்தினர் மே மாதத்திற்கான தாதியர்களுக்கான மாதாந்த சம்பளம் குறைப்பு தொடர்பாக அதிருப்தி தெரிவித்து நேற்றைய தினம் (20) சுமார் நான்கு மணித்தியாலங்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (படம்: லுணுகல நிருபர்)

# கடும் மழையினால் மஞ்சள் செய்கை பாதிப்பு

**( ஹாலிஎல விசேட நிருபர் )**

மஞ்சள் இ றக்குமதி செய்வதை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவின்படி, நாடு பூரா வும் மக்கள் தங்கள் வீட்டு முற்றத்தில் முடிந்தவரை பயிரிடுமாறு அரசாங்கம் வலியுறுத்தியது.

வெளிநாட்டிலிருந்து மஞ்சளை இறக்குமதி செய்வதை நிறுத்தியவுடன், தமது சொந்த நிலங்களில் மஞ்சள் செய்கையை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கமைய ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் விவசாயிகள் மஞ்சள் பயிரிடுவதற்கு முன்னுரிமையளித்தனர். விவசாயிகள், ஏனைய பயிர்ச்செய்கைகளைத் தவிர்த்து, மஞ்சள் பயிர்ச்செய்கைக்கு முன்னுரிமை அளித்து முடிந்த இடங்களில் மஞ்சளைப் பயிரிட முற்பட்டனர். விவசாயிகள் மஞ்சள் அறுவடைக்காக காத்திருந்தனர், ஆனால் அவர்களின் நம்பிக்கைகள் அனைத்தும் கடும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதன்காரணமாகவும், அதிகசெலவு ஏற்படுவதாலும், தற்போது மஞ்சள் அறுவடை பணிகளையும் விவசாயிகள் கைவிட்டுள்ளனர்.



தெமோதரை புகையிரத நிலையத்தை சார்ந்த வனப்பகுதிக்கு இனந்தெரியாதவர்கள் தீ மூட்டியுள்ளனர். இதனால், 40ற்கும் மேற்பட்ட ஏக்கர் வனப்பகுதி தீக்கிரையானது. தீயைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் பாரிய முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் வனப்பகுதி முற்றாக தீக்கிரையானது.

### வீடுகளுக்கு தீ வைத்த சம்பவம்

# 10 பேர் அடங்கிய பாராளுமன்ற குழு பலாங்கொடைக்கு விஜயம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்)**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள மற்றும் பலாங்கொடை உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் வீடுகளுக்கு தீ வைத்து கொளுத்தியமை தொடர்பாக பரிசீலனை செய்ய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின் ஆசன பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அடங்கிய குழுவொன்று கடந்த 18ஆம் திகதி பலாங்கொடைக்கு வருகை தந்தனர்.

அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவளவின் வீட்டையும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களான வசந்த குணரத்ன மற்றும் சுனில் பேமசிரி ஆகியோரின் வீடுகளையும் நேரில் சென்று அவதானித்தனர்.



இது சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற குழுவினர், இவ்விடயத்தை பாராளுமன்றத்திற்கு அறிவுறுத்தி நடவடிக்கை எடுப்பதுடன் தீயினால் சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கவும் பாராளுமன்றத்தை அறிவுறுத்துவதாக தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கே. பி. எஸ். குமாரசிறி சுதத் மஞ்சுல லலித் எல்லாவள உதயன கிரிந்திகொட வஸந்த யாபா பண்டார கருணதாஸ கொடிதுவக்கு உபுல் கலப்பத்தி குணபால ரத்னசேகர உதய சாந்த குணதிலக மற்றும் அகில சாலிய எல்

# கிழக்கின் குரல்



கிழக்கு மாகாணத்தில்

## 28,882 மாணவர்கள் O/L பரீட்சைக்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

**றொட்டவெவ குறூப் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நான்கு கல்வி மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் அம்பாறை அகிய கல்வி மாவட்டங்களை மையமாகக் கொண்டு நான்கு பிராந்திய இணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அதற்கான ஆளணியினரும் நியமிக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக தெரிவித்துள்ளார்.

இவ்வருட க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்கு கிழக்கு மாகாணத்தில் 53 இணைப்பு நிலையங்களும் 407 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கிழக்கு மாகாணத்தில் இவ்வருடம் தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளாக 22,805 மாணவர்களும், சிங்கள மொழி மூல பரீட்சார்த்திகளாக 6077 மாணவர்களும் மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 28,882 மாணவர்களும் பரீட்சைக்கு தோற்ற உள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

குறித்த பரீட்சைக்கு கடமைகளுக்காக 2340 அதிபர்,ஆசிரியர்கள் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்

மேலும் கொரோன தொற்று காரணமாக மாணவர் ஒருவர் பரீட்சை எழுத முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் தனியான ஒரு பரீட்சை நிலையம் அமைக்க முடியாத பட்சத்திலும் குறித்த தொற்றுக்குள்ளான மாணவர்களுக்கு தனி வகுப்பறை ஒன்றில் பரீட்சைக்கு தோற்றுவதற்காக ஏற்பாடுகளும் ஆளணிகளும் தயார் நிலையில் இருப்பதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## அட்டாளைச்சேனையில் மாணவர்களுக்கு பைஸர் இரண்டாவது டோஸ்

### 04 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவும் அறிவுறுத்தல்

**ஒலுவில் விசேட நிருபர்**



அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொவிட்19 இரண்டாவது பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் மற்றும் தீகவாபி ஆகிய பிரதேசங்களிலுள்ள சகல பாடசாலைகளிலும் 12 தொடக்கம் 16 வயது வரையிலான முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கொவிட்19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 04வது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுகாதார வைத்தியதிகாரி காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்குச் சென்று தங்களுக்கான 04 வது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

வெளிநாடு செல்பவர்களுக்கு கொவிட்19 பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாடு செல்பவர்கள் தடுப்பூசி தேவைப்படும் பட்சத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்ளை தொடர்பு கொண்டு தமக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் டெங்கு நோயினால் இருவர் பலி

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

டெங்கு நோயால் இரு இளம் குடும்பஸ்தர்கள் மட்டக்களப்பு மாநகர பகுதியில் உயிரிழந்துள்ளனர் என்று மண்முனை வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியர் இளையதம்பி உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுவரை சுமார் 240 இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, நாட்டில் டெங்கு தாக்கம் அதிகமுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை

## வெளி நோயாளர் சிகிச்சை பிரிவு இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளது

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ள வெளி நோயாளர் சிகிச்சை பிரிவின் நடவடிக்கைகள் (19) வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் வைபவ ரீதியாக இதனை ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி 231 படைப் பிரிவின் பிரிகேடியர் திலீப் பண்டார. உட்பட காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவின் சகல நடவடிக்கைகளும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதற்காக ஒவ்வொரு நோயாளருக்கும் தனித் தனியாக அட்டை சுகாதார அமைச்சினால் வழங்கப்படுகிறது. இதற்காக வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுக்கு வரும் நோயாளியொருவர் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். சிறுவர்கள் அல்லது குழந்தைகளாயின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அல்லது சிறுவர் ஆரோக்கிய விருத்தி பதிவேடு என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது



பாலமுனையை சேர்ந்த ஏ.எல். சுதைஸ் முகம்மட் மகற்பேற்று வைத்திய நிபுணர் (VOG) பரீட்சையில் சித்தியடைந்ததையொட்டி பிரதேச விளையாட்டுக் கழகத்தினரால் பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு பாலமுனையில் இடம்பெற்ற போது.

படம்: பாலமுனை தினகரன் நிருபர்

## பாலையடிப் போட்டா வடிச்சல் வாய்க்கால் சேதமடைந்த நிலையில்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பாலயடி போட்டா, தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் இதன் மேலாக போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள்ளது. இதனால் ஏனைய வயல்களுக்கு செல்லும் விவசாயிகளும் உழவு இயந்திரங்களும் சுற்றி வளைத்தே தமது வயல் நிலங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள்ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வட்டவிதானைகள் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை இவ்வாய்க்கால் திருத்த வேலைகள் இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஒரு மாதத்துக்கு பின்னர் கல்லாறு பாலம் அருகே எரிவாயு விநியோகம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு இன்மையினால் பல சிற்றுண்டிச்சாலைகளும், உணவகங்களும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் ஒரு மாத இடைவெளிக்கு பின்னர் நேற்று (20) கோட்டைக் கல்லாறு பாலத்திற்கு அருகிலுள்ள பிரதான வீதியில் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து பிராதன வீதியில் ஒன்று கூடிய மக்கள் சமயல் எரிவாயுவினை பெற்றுக்கொள்ள முண்டியடித்தனர். இதனால் பிரதான வீதியின் போக்குவரத்திலும் சிரமம் ஏற்பட்டிருந்தது. எரிவாயு விநியோகிக்கப்பட்ட இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் மக்களை கட்டுப்படுத்தி வரிசையில் காத்திருக்க வைத்தனர்.

140 எரிவாயு சிலிண்டர்களே கொண்டுவரப்பட்டிருந்தன. ஆனால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வரிசையில் காத்திருந்ததுடன். பலர் எரிவாயு கிடைக்காமையினால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

## ஏறாவூரில் பெண்களுக்கென பிரத்தியேக நூலகம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**




ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில் பெண்களுக்கென பிரத்தியேக நூலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூரில்தான் பெண்களுக்கென இலங்கையிலேயே தனியான பொதுச் சந்தையும் உள்ளது. அதேபோல் பெண்களுக்கென தனியாக உடற்பயிற்சி ஏற்பாடுகளும் ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பாத்திமா மகளிர் நூலகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வாசிகசாலைத் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை மாலை ஏறாவூர் வாவிக்கரையோரத்தில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நகர சபைத் தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூரின் பெண் ஆளுமைகளான பிரதேச செயலாளர் நிஹாறா, ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி ஷாபிறா, பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் சிஹானா உட்பட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

## பொதுப்பணிக்கு தாலியை தானமாக வழங்கிய வீரப்பெண்மணி

**காரைதீவு குறூப் நிருபர்**



பொதுப்பணிக்காக நிதி சேகரிக்கையில், தனது தாலியை தானமாக வழங்கினார் ஒரு வீரப்பெண்மணி. இவ் உணர்ச்சிபூர்வமான சம்பவம், காரைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. காரைதீவின் வடகோடியிலுள்ள காணியொன்று மாற்றினத்தாருக்கு விற்கப்பட்டுவிட்டது. அதனை மீளப்பெறுவதற்காக காரைதீவு அனைத்து ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் உள்ளிட்ட பொதுப்பணிக்குழுவினர் களத்திலும், புலத்திலுமிருக்கக்கூடிய உணர்வுள்ள காரைதீவு மக்களிடம் நிதி சேகரிப்பிலிடுபட்டார்கள். இலட்சக் கணக்கில் மக்கள் உணர்வுபூர்வமாக தாராளமாக நிதியுதவி வழங்கினர்.

காரைதீவு 8ஆம் பிரிவில் நிதி சேகரிப்பில் வீடு வீடாகச்சென்றபோது ஒரு பெண்மணி தானாக முன்வந்து 'எப்படியாவது அக்காணியை மீட்டெடுங்கள்' என உணர்வுபூர்வமாகக் கூறி தனது கழுத்திலிருந்த 10 பவுண் தாலியை கழற்றி குழுவினரிடம் கையளித்தார்.

காரைதீவு 8 ஜச் சேர்ந்த ஒரு விவசாயியின் மனைவியான திருமதி சாமித்தம்பி சாந்தினி என்பவரே இவ்விதம் தனது தாலியை பொதுப்பணிக்காக வழங்கியவராவார்.

# ஜனாதிபதியால் மேலும் சிலர் அமைச்சர்களாக நியமிப்பு...


நிமல் சிறிபால டி சில்வா
துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும்
சேவைகள் அமைச்சர்


கலாநிதி சுசில் பிரேமஜயந்த
கல்வி அமைச்சர்


கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல
சுகாதார அமைச்சர்


டிரான் அலஸ்
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்


நலின் பெர்னாண்டோ
வணிகம், வர்த்தக மற்றும்
உணவுப் பாதுகாப்பு அமைச்சர்


ரமேஷ் பத்திரன
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர்


மனுஷ நாணயக்கார
தொழிலாளர் மற்றும்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்


ஹரின் பெர்னாண்டோ
சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்


கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ
நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும்
அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர்

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட விசேட கலந்துரையாடல்

இந்தியாவுக்கான இலங்கை உய ர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் குமார் தோவாலை, (19) புது டெல்லியிலுள்ள அ வ ரது அலுவலகத்தில் சந்தித்தார்.

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் ஆதரவிற்கு உயர்ஸ்தானிகர் தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச ஆதரவைப் பெறுவதற்கு இந்தியா



வின் உதவியை உயர் ஸ்தானிகர் மொரகொட கோரினார், அதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாதகமாக பதிலளித்தார்.

இக் கலந்துரையாடலின் போது இ ரு த ரப்பு உறவுகளின் நிலை பற்றிய விரிவான மீளாய்வு செய்யப்பட்டதுடன் எதிர்கால ஒத்துழைப்புக்கான முன்னுரிமைப் பகுதிகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதுடன், நிலைமையை நிர்வகிப்பதற்கு

இந்தியாவின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி மற்றும் புதுடெல்லியிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் நிலுகா கதுருகமுவ ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.





கண்டி மாநகர சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவரின் வெற்றிடத்திற்கு கிங்ஸ்லி பிரசன்ன குமார புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு கண்டி டெவொன் ஹோட்டலில் இடம்பெற்றது. கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரான முன்னாள் மத்திய மாகாண முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டி மாநகர சபை உறுப்பினராக கிங்ஸ்லி பிரசன்ன பதவிப் பிரமாணம் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சிவபாலன், ஐ. ஜனூடீன், வஹாப் மாஸ்டர் உள்ளிட்ட கட்சியின் மாவட்ட, தொகுதி அமைப்பாளர்கள், பலர் கலந்து கொண்டனர்.
படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

## ஊடகவியலாளர் மற்றும் பழங்குடியினர் மீது பொய் வழக்குகள்

### கைபர் மாவட்டத்தில் எதிர்ப்புப் பேரணி

பாகிஸ்தான் கைபர் மாவட்டத்தில் அப்பாவி பழங்குடியினர் தீவிரவாதிகள் என்ற போலிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்படுவதாகவும் ஊடகவியலாளர்களும் காவலில் வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இம் மாவட்டத்தின் பாரா பத்திரிகை சங்கத்தின் முன்னாள் தலைவர் காதிம் கான் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்தும் அவரை விடுதலை செய்யும்படியும் கோரி எதிர்ப்புப் பேரணி ஒன்று நடைபெற்றது.

கைபர் மாவட்டத்தின் மூன்று பத்திரிகையாளர் சங்கங்களும், உள்ளூர் அரசியல் தலைவர்களும் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்ட பேரணி கைபர் சௌக்கில் இருந்து பாரா நகர்வரை நடைபெற்றது.

பழங்குடி மக்கள் நாட்டுக்காக பல தியாகங்கள் செய்துள்ள போதிலும் பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டில் அப்பாவிகள் பலர் கைதாகி வருவதாகவும் பயங்கரவாத எதிர்ப்பு திணைக்களம் உண்மையான பயங்கரவாதிகளைக் கைதுசெய்வதற்கு பதிலாக பயங்கரவாதி என்ற பெயரில் அப்பாவி பழங்குடியினரைக் கைதுசெய்வதாகவும் இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாராவைச் சேர்ந்த மக்களையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்கு கைபர் மாவட்ட பொலிஸ்




தவறிவிட்டதாக பேரணியில் உரையாற்றியோர் தெரிவித்தனர்.

இம் மாவட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ஊடகவியலாளர் சமூகத்துடன் நட்புறவுடன் இல்லை என்றும் இது நீடிக்குமானால் அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸார் தொடர்பான நிகழ்வுகளை ஊடகவியலாளர்கள் புறக்கணிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இம்ரான் கான் மீது ஊழல் புகார்கள்; பாக். பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



முன்னாள் பாக். பிரதமர் இம்ரான்கான் ஆட்சி காலத்தில் நடந்திருக்கக்கூடிய ஊழல் மோசடி புகார்கள் விசாரிக்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா மொஹமட் ஆஸிப் இஸ்லாமாபாத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அப்துல் காதர் பல்கலைக்கழகத்தில் ரொக்கப் பணம் மற்றும் காணி மோசடிகள் நடைபெற்றிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அப்துல் காதர் பல்கலைக்கழகத்தின் காப்பாளர்களாக இம்ரான்கான், அவர் மனைவி மற்றும் மனைவியின் நண்பியான ஃபாரா ஆகியோர் விளங்குவதாகவும் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு 500 மில்லியன் ரூபா பணமும் 450 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள இவர், நண்பியான ஃபாராவுக்கும் 200 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளதாக தன் பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டார்.

ஒரு வீடமைப்புத் திட்ட நிறுவனத்துக்கு 450 பில்லியன் ரூபா அரசு தரப்பில் வழங்கப்பட்டதற்கு ஈடாகவே பணமும் காணியும் இம்ரான்களுக்கு தரப்பட்டிருக்க வேண்டும். மேலும் பிரித்தானியாவின் தேசிய குற்றப் பிரிவு காரணம் தெரிவிக்கப்படமுடியாத 150 மில்லியன் பவுண்களை கண்டறிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஒரு தொகைப் பணம் பாகிஸ்தான் அரசுக்கு அனுப்பப்பட்டது.

அன்றைய பிரதமர் இம்ரான் கானின் உத்தரவையடுத்து மேற்படி வீடமைப்புத் திட்ட நிறுவனத்தின் மீது பாக். உயர் நீதிமன்றம் விதித்திருந்த தண்டப் பணமாக அது மாற்றப்பட்டது. இந்நிறுவன உரிமையாளருக்கு பிரிடன் விசா வழங்க மறுத்திருப்பதோடு பத்து வருடகால தடையையும் விதித்துள்ளது என தனது உரையில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததோடு இந்த ஊழல் புகார்கள் விசாரிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# இங்கிலாந்து ஒருநாள் மற்றும் 20க்கு 20 அணிகளுக்கு புதிய பயிற்சியாளர்



அவுஸ்திரே லிய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளரான மெத்யூ மோட், மட்டு ப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டிகளுக்கான இங்கிலாந்து ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை டெஸ்ட் மற்றும் மட்டுப்படுத்தப் பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் அணிகளுக்கு தனித்தனி தலைவர்களை நியமித்ததுபோல், தற்போது பயிற்சியாளர்களையும் தனித்தனியாக நியமித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் பிரண்டன் மெக்கல்லம் நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்து ஒருநாள் மற்றும் ரி 20 அணிகளுக்கான தலைமைப் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மெத்யூ மோட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் முதல்தர மற்றும் லிஸ்ட் ஏ கிரிக்கெட் போட்டிகளில் மாத்திரம் விளையாடிய அனுபவத்தைக் கொண்ட இவர், அவுஸ்திரேலியா சார்பில் எந்தவொரு சர்வதேச கிரிக்கெட்டிலும் விளையாடவில்லை. ஆனால் பயிற்சியாளராக பல ஆண்டுகால அனுபவம் கொண்டவர்.

48 வயதான மெத்யூ மோட், இங்கிலாந்து ஒருநாள் மற்றும் ரி 20 அணியின் பயிற்சியாளராக நான்கு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நெதர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து தனது பணியை அவர் ஆரம்பிக்கவுள்ளார்.

2015ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மெத்யூ மோட் பணியாற்றி வருகின்றார்.

குறித்த ஏழு ஆண்டு காலத்தில் அவுஸ்திரேலிய மகளிர் அணி இரண்டு தடவைகள் ரி 20 உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற மகளிருக்கான ஒருநாள் உலகக் கிண்ணத்தையும் அவுஸ்திரேலிய அணி வென்றதுடன், நான்கு ஆஷஸ் தொடர்களில் அவுஸ்திரேலிய மகளிர் அணி தோல்வியை சந்திக்காமல் உள்ளது.

இவரது பயிற்றுவிப்புக் காலத்தில் தான் அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக 26 ஒருநாள் போட்டிகளை வென்று உலக சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.



## உபாதை காரணமாக அணியிலிருந்து வெளியேறும் பங்களாதேஷ் வீரர்

இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரிலிருந்து பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் சொரிபுல் இஸ்லாம் நீக்கப்பட்டுள்ளார்.

சுற்றுலா இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

முதல் டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாள் ஆட்டம் நடைபெற்றுவரும் நிலையில், பங்களாதேஷ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் சொரிபுல் இஸ்லாம் உபாதை காரணமாக அணியிலிருந்து வெளியேறியுள்ளார்.

நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில் இவர் பந்துவீசியிருந்த போதும், நேற்றைய நான்காவது நாள் ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடும் போது, இவருடைய கைவிரல் பகுதியில் பந்து தாக்கியிருந்தது. குறித்த உபாதை காரணமாக அவர், ஆட்டமிழக்கும் முன்னர் களத்திலிருந்து வெளியேறியதுடன், பங்களாதேஷ் அணியின் இன்னிங்ஸும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த உபாதை குறித்து மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையில், சொரிபுல் இஸ்லாமின் கைவிரல் பகுதியில் (மணிக்கட்டு) எழும்பு முறிவு ஏற்பட்டிருந்தமை உறுதிசெய்யப்பட்டது. இதன்காரணமாக ஐந்தாவது நாளான இன்று அவர் போட்டியில் பங்கேற்கவில்லை.

சொரிபுல் இஸ்லாமின் உபாதை குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள தகவலில், அவரால் எதிர்வரும் 2 வாரங்களுக்கு போட்டிகளில விளையாட முடியாது எனவும், அதுவரையில் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

சொரிபுல் இஸ்லாம் இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் எனவும், முழுமையான தொடரிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான பங்களாதேஷ் குழாத்தில், சொரிபுல் இஸ்லாமிற்கு பதிலாக புதிய வீரர்கள் இணைக்கப்படமாட்டார் எனவும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழா நவம்பரில்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவை எதிர்வரும் நவம்பர் 22, 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சின் பணிப்பாளர் தயா பண்டார, பிரதிக் கல்விப் பணிப்பாளர் உபாலி அமரதுங்க, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ருவன் பத்திரன, தில்ருக் ஜயவர்தன மற்றும் பிரபாத் இந்திக்க ஆகியோரது பங்குபற்றலுடன் இம்முறை அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவை நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆண்டுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் அனைத்தும் வழமை போன்று மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, 20 வயதுக்குட்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்), 18 வயதுக்குட்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்), 16 வயதுக்குட்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்), 17 வயதுக்குட்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்) மற்றும் 12 வயதுக்குட்பட்ட (ஆண்கள் மற்றும் பெண்கள்) ஆகிய வயதுப் பிரிவுகளில் இம்முறை போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இந்த ஆண்டு அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவின் குழுநிலை மற்றும் எடைப் பிரிவு விளையாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மூன்று கட்டங்களாக இடம்பெறும். இதில் முதல் கட்டம் செப்டம்பர் 17, 18 மற்றும் 19 ஆகிய திகதிகளிலும், இரண்டாவது கட்டம் செப்டம்பர் 23, 24, 25 மற்றும் 26 ஆகிய திகதிகளிலும்,

மூன்றாவது கட்டம் ஒக்டோபர் 01, 02, 03 மற்றும் 04 ஆகிய திகதிகளிலும் நடைபெறும்.

## நிந்தவூர் லகான் அணிய வீழ்த்தி பட்டியடிப்பிட்டி ஓசோன் அணி சம்பியனாக தெரிவு



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) 2007 – 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலிருந்த கரப்பாந்தாட்ட அணி வீரர்களுக்கு பயிற்சியளித்து தேசிய மட்டம் வரை சென்று சாதனை பெறுவதற்கு வழியமைத்த கல்லூரியின் ஆசிரியரும், கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளருமான எஸ்.ஏ.சீ. எம்.றமீன் அவர்களை கௌரவப்படுத்துமுகமாக, அம்மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட "றமீன் சேர் சம்பியன் கிண்ணம் 2022" இரவு நேர கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பட்டியடிப்பிட்டி ஓசோன் கரப்பந்தாட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இச்சுற்றுத் தொடரில்அம்பாறைமாவட்டத்தில்உள்ளதலை சிறந்த 16 கழகங்கள் பங்குபற்றி இருந்தது. இறுதிப்போட்டிக்கு தெரிவான ஓசோன் அணி, நிந்தவூர் லகான் கரப்பாந்தாட்ட அணியை 18:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணம் மற்றும் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டதோடு, இரண்டாம் இடத்தை பெற்ற லகான் அணிக்கு கிண்ணம் மற்றும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக ஆசிரியர் எஸ்.ஏ.சீ.எம். றமீன் அவர்களும், விசேட அதிதியாக கல்லூரியின் அதிபர் ஏ.பீ.முஜீன், ஓய்வு பெற்ற கல்லூரியின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் விளையாட்டு வீரர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அட்டாளைச்சேனை எவர்டொப் விளையாட்டுக் கழகம் சம்பியன்

(பாலமுனை விசேட நிருபர்)



அக்கரைப்பற்று பவர் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட பவர் சம்பியன் கிண்ணம் – 2022 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை எவர்டொப் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

பவர் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட அணிக்கு 11பேர் 8ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் திங்கட்கிழமை (16) ஆலையடிவேம்பு தர்மசங்கரி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை எவர்டொப் மற்றும் அக்கரைப்பற்று சம்பியன் ஆகிய விளையாட்டுக் கழக அணிகள் மோதிக்கொண்டன. நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய எவர்டொப் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8ஓவர்கள் முடிவில் 06விக்கட்டுக்களை இழந்து 71ஓட்டங்களைப் பெற்றனர்.

72ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சம்பியன் கழக அணியினர் 8ஓவர்கள் முடிவில் 08விக்கட்டுக்களை இழந்து 45ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியினைத் தழுவிக்கொண்டனர். இறுதிப்போட்டியின் போது தனது திறமைகளை வெளிப்படுத்தி எவர்டொப் கழக வெற்றிக்கு வழிவகுத்த என்.எம். சியாம் இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், இச்சுற்றுத்தொடரின் சிறந்த வீராக அக்கழகத்தின் இனாத் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பவர் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளருமான ரீ.கிறோஜாதரன் தலைமையில் இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் பவர் விளையாட்டுக் கழகத்தின் செயலாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ரீ.தனராஜன், சமூக செயற்பாட்டாளர் ரீ.பிரதீபன், பவர் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகரும், ஆலையடிவேம்பு ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியுமான ரீ. குவிதாகரன், ஆலோசகர்களான எம்.தயாகரன் மற்றும் ரீ.ரதிகரமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இறுதிப்போட்டியின் போது வெற்றிபெற்று முதலிடத்தினைப் பெற்றுக்கொண்ட எவர்டொப் கழக அணியினருக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டாமிடத்தினை பெற்ற சம்பியன் விளையாட்டுக் கழக அணியினருக்கும் கிண்ணமும் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அம்பாரை மாவட்டத்திலுள்ள 32முன்னனிக் கழகங்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## மட்டக்களப்பு மண்முனை மேற்கு கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி – 2022

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு கோட்ட மட்ட மெய்வல்லுநர் திறனாய்வு 2022 ஆம் ஆண்டுக்கான போட்டி நிகழ்வுகள் மட்டக்களப்பு மண்முனை மேற்கு நாவற்காடு நாமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மண்முனை மேற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.முருகேசுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கோட்ட மட்ட மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாக மண்முனை மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் மற்றும் விசேட அதிதிகளாக மண்முனை மேற்கு வலயக்கல்வி அலுவலக பிரதி கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

மண்முனை மேற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற மண்முனை மேற்கு கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் முதலாம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட 2022 ஆண்டுக்கான மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டு போட்டி நிகழ்வுகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற பாடசாலைகளின் மாணவர்களுக்கான சான்றிதழ்களுடன் வெற்றி கிண்ணங்களும், வெற்றி பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டு போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் உடற்கல்வி ஆசிரியர்கள், பாடசாலை விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர் இடையில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## தாச்சிப் போட்டி முடிவுகள்

(யாழ்.விளையாட்டு நிருபர்)

யாழ்.தாச்சி விளையாட்டுச்சங்கம் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரில் சாந்தைவினாயகர் அணி,தென்றல் அணி, அண்ணா அணி,ஞானவைரவர் அணி ஆகியவை வொற்றி பெற்றன.

பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற பண்டத்தரிப்பு சாந்தை அணிக்கும், உதயசூரியன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை அணி 5:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. இராண்டவதகாக இடம் பெற்ற தென்றல் அணிக்கும்,யுவசத்தி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தென்றல அணி 12:2 என்றபுள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றவதாக இடம் பெற்ற அண்ணா அணிக்கும்,சங்கனை கிங்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அண்ணா அணி 5:2 என்றபுள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. நான்கவதாக இடம் பெற்ற ஞானவைரவர் அணிக்கும்,மயிலிட்டி கண்ணாகி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஞானவைரவர் அணி 5:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

# கொழும்பு மாவட்ட வெற்றுக் காணிகளில் பயிர் செய்கை செய்ய விசேட வேலைத்திட்டம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



இந்த வருடத்தில் நாடு பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்க நேரும் என்றும் அதில் கொழும்பு மாவட்ட மக்களே பெரிதும் பாதிப்படையலாம் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கிணங்க இந்த மாவட்டத்தில் காணப்படும் வெற்றுக் காணிகளில் பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்கும் வகையில் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் முன்வைத்த விடயங்களுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.அது தொடர்பில் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நகரில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக எரிபொருளை பெற்றுக்கொள்வதில் மக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதேபோன்று அன்றாட உணவுத் தேவைகளுக்கே மக்களுக்கு பணம் போதுமானதாக இல்லை. எவ்வாறெனினும் அது தொடர்பில் அடுத்த வாரம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை உணவுப் பிரச்சினை கொழும்புக்கு மாத்திரமன்றி உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படவுள்ளது. உலக வங்கி இதற்கு நிவர்த்தி காணும் வகையில் 30 பில்லியனை ஒதுக்கியுள்ளதாக அறிகிறேன். அதேபோன்று அமெரிக்காவின் நிதி யமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளரும் உலகம் எதிர்நோக்கவுள்ள பாரிய பிரச்சினைக்கு தாம் தயாராகி வருவதாகவும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் இந்த வருடத்தில் நிச்சயமாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அதில் குறிப்பிடப்படும் நாடுகளில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானும் உள்ளடங்குகின்றன.அது தொடர்பில் கவனம் செலுத்தி நாம் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.பயிர் ச்செய்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கொழும்பு, மொரட்டுவ, தெஹிவளை உள்ளிட்ட பகுதிகளிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதற்கான மானியங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாம் ஒன்றிணைந்தே அதனை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையிலும் வீழ்ச்சி ஏற்படும். அதனைக் கவனத்திற் கொண்டு நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட ரீதியில் குழுக்களை அமைத்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து வெற்றுக்காணிகளையும் பயிரிடுவதற்காக பயன்படுத்துவோம். அதற்காக கொழும்பு மாவட்டத்தின் அனைத்து எம்.பிக்களும் ஒன்றிணைந்து அனைத்து பிரதேசங்கள் தொடர்பிலும் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சபை நிருபர்கள்:
**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



# பொறுப்புக்களை புதிய பிரதமரிடம் கொடுத்துவிட்டு தாம் தப்பித்து விட்டதாக ஜனாதிபதி நினைக்கக் கூடாது

## சபையில் இராதாகிருஷ்ணன் எம். பி.



நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பொறுப்புக்களை பிரதமர் ரணிலிடம் கொடுத்துவிட்டு ஜனாதிபதி தப்பித்து விட்டதாக நினைக்கக் கூடாது என்றும் வேலுசாமி இராதாகிருஷ்ணன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

19வது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்பு திருத்தம் வரும்வரை ஜனாதிபதி தமது பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

லிபியாவில் அன்றைய ஜனாதிபதி கடாபியை அந்த நாட்டு மக்கள் வீதியில் வைத்து தாக்கினர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாமையே அதற்கு காரணம். அப்படி ஒரு நிலை இங்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் சகல மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும். சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த நாம் முன்மாதிரியாக செயற்படுவது அவசியமாகும்.

இலங்கை நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள இத்தகைய சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கம் பெரும் உதவிகளை செய்து வருகின்றது. அதற்காக நாம் இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றோம். அதேபோன்று தமிழக அரசும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கைக்கு வழங்கி உதவ முன்வந்துள்ளது. அதற்காக தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் மற்றும் பிரதி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரனுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ்நாட்டில் யாசகர் ஒருவரும் பத்தாயிரம் ரூபா நிதி வழங்கி இலங்கைக்கு உதவியுள்ளார்.அத்தகைய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் கஷ்டமானது. அதற்கு அரசியல் கலாசார மாற்றம் அவசியமாகும்.எம்.பி. க்களை விலைக்கு வாங்கும் மோசமான கலாசாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடு ஜனநாயக ரீதியிலேயே முன்னெடுக்கப்படவேண்டும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



நாடு ஜனநாயக ரீதியிலேயே முன்னெடுக்கப்படவேண்டுமே தவிர அச்சுறுத்தி அல்லது வேறு விதத்தில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க முடியாது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நான்காவது நாளாக இடம்பெற்ற கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்கள் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டும். எனினும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள சில ஆயிரக்கணக்கானவர்களுக்காக அரசியலமைப்பை மீறி செயற்பட முடியாது. 69 இலட்சம் மக்கள் வாக்களித்து ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர். கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன கட்சி ஒருபோதும் படுகொலை மூலம் அரசியல் செய்யும் கட்சிகள் அல்ல. எனினும் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பி போன்ற கட்சிகள் படுகொலை மூலம் அரசியல் நடத்திய வரலாறுகள் உள்ளன. 88,89 காலங்களில் அரசியலுக்காக மக்கள் கொலை செய்யப்பட்டனர்.

ஜே.வி.பி கிளர்ச்சி காலத்தில் மிக மோசமான படுகொலைகள் நடைபெற்றன.

நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் நாம் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிபந்தனைகளைப் போட்டு அதிலும் அரசியல் இலாபம் தேட முனைந்தார்.

இப்போதும் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்க யார் முன் வந்தாலும் நான் எனது அமைச்சர் பதவியை விட்டுக்கொடுக்கத் தயாராக உள்ளேன். இந்த நாடு ஜனநாயக ரீதியாக கட்டியெழுப்பப்பட வேண்டும்.

**கொழும்பு காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:**

# தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி தர்மலிங்கம் சித்தார்த்தன்



கொழும்பு காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டமை ஒரு சிறந்த ஆரம்பமாக அமைந்துள்ளதுடன் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு இந்த செயற்பாடு முன்னுதாரணமாக அமைந்துள்ளதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்பி தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இளைஞர்களின் சிந்தனையை ஏற்றுக்கொண்டு இன ஒற்றுமையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கடந்த 9 ஆம் திகதிய வன்முறைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை பறி கொடுத்த தமிழ் மக்களின் நினைவு தினம் கடந்த புதன்கிழமை முள்ளிவாய்க்காலில் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக இது அனுஸ்டிக்கப்பட்டதுடன் இம்முறை விசேடமாக கொழும்பு காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டிருப்பது ஒரு நல்ல ஆரம்பமாக, நல்ல அறிகுறியாகவும் உள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கிற்கு வெளியே இது யுத்த வெற்றி தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

இம்முறை அந்த செயற்பாடானது தென்னிலங்கையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.

தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காக ஆட்சி முறையில் ஒரு மாற்றம் கொண்டு வருவது சம்பந்தமாக பேசப்படுகின்றது. ஆட்சி முறை என்கின்றபோது ஜனாதிபதி முறையை மாற்றுவது மட்டுமல்ல தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வை முன்வைக்க வேண்டும்.

சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைப்பதன் மூலம் தமிழ் மக்களும் தாங்களும் இந்த நாட்டு பிரஜைகள்தான் என்ற சிந்தனையுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தமது முழுமையான பங்களிப்பை வழங்குவார்கள்.

இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் மாத்திரமல்ல புலம்பெயர் தமிழ் மக்கள் கூட நாட்டின் நெருக்கடி நிலை தீர்வுக்கு உதவி செய்வார்கள்.

புலம்பெயர் தமிழர்கள் வசதியாக வாழ்கின்ற நிலையில் பாரியளவில் முதலீடுகளை செய்வதற்கும் அவர்கள் தயாராகவுள்ளார்கள்.

ஆனால் அவர்களுக்கோ அவர்களின் முதலீடுகளுக்கோ உத்தரவாதம் இல்லை என்ற பயம் காணப்படுகிறது.

யுத்தம் முடிந்த பின்னர் அவர்கள் முதலீடுகளை செய்ய வந்த போதும் தடைகள் போடப்பட்டன.

இதனால் அவர்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அந்த நம்பிக்கையை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.






# மக்களுக்கு சேவை செய்வதற்கும் அரசியல் அதிகாரம் அவசியம்

## நசீர் அகமட் எம்பி சபையில் தெரிவிப்பு



மக்களுக்கு சேவை செய்ய அரசியல் அதிகாரம் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட் தெரிவித்தார்.

தமது அதிகாரத்தை முழுக்க முழுக்க மக்கள் சேவைக்கே பயன்படுத்தியதாக தெரிவித்த அவர், தாம் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளதாக சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

கடந்த 9ஆம் திகதி நாட்டில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதுபோன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக்கூடாது.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவி வகித்த போதும் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக பதவி வகித்த போதும் மக்களுக்கான சேவைக்கு என்னை அர்ப்பணித்து செய்யப்பட்டுள்ளேன். நான் முதலமைச்சராக பதவி வகித்தபோது எமது மாகாணத்தில் 20 ஆயிரம் மக்களுக்கு தொழில் வழங்கும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அதன் தொடர்ச்சியாகவே பாராளுமன்றத்திற்கு வந்த பின்னரும் மக்களுக்கான சேவையை தொடர்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன். முழு நாட்டுக்கும் முன்னுதாரணமான மக்கள் சேவையை செய்வதே எனது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை காலத்தில்:**

# போக்குவரத்து சேவை மற்றும் மின் வெட்டு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்



ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை பரீட்சை நடைபெறும் தினங்களில் பொது போக்குவரத்து சேவையை தடையின்றி அந்த மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் பரீட்சைக் காலத்தில் மின் துண்டிப்பு இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைக் கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் திங்கட்கிழமை கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை நடைபெறவுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக மாணவர்கள் உரிய நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, கிராமப்புறங்களில் இலங்கை போக்குவரத்து பஸ் சேவைகளை உரிய காலத்தில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பரீட்சை நடைபெறும் காலத்தில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ளும் வகையில் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் களமாக பாராளுமன்றம் மாற வேண்டும்

## சபையில் சதாசிவம் வியாழேந்திரன் எம். பி



பாராளுமன்றம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் களமாக மாற வேண்டுமே தவிர வங்குரோத்து அரசியல் செய்வோர் தம்மை கட்டியெழுப்புவதற்கான தளமாக அமைந்து விடக்கூடாது என சதாசிவம் வியாழேந்திரன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்று கொடுப்பவர்களாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் மாற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று, கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

தற்போது ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாத பல குடும்பங்கள் நாட்டில் உள்ளன. மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் 90வீத மானவர்கள் பிரச்சினைகள் பற்றி மட்டுமே பேசுகின்றார்களே தவிர அவற்றுக்கான தீர்வுகள் பற்றி எதையும் பேசுவதில்லை.

சிலர் ஊடகங்களுக்கும் தமது முகநூல் பதிவுகளுக்குமாகவே பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறார்கள். ஆனால் நாம் தீர்வுகள் பற்றி பாராளுமன்றத்தில் விடயங்களை முன்வைக்க வரும்போது எமக்கு வழங்கப்பட்டுள்ள நேரத்தையும் அவர்கள் எடுத்துக் கொள்வதால் மிக சொற்ப நிமிடங்களே எமக்கு கிடைக்கின்றன. அந்த சில நிமிடங்களில் எந்த தீர்வை முன்வைக்க முடியும்?

நாம் சிறு வயதிலிருந்தே மிகவும் கஷ்டமான வாழ்க்கையை முன்னெடுத்து வந்தவர்கள். எமது மக்களின் கஷ்டங்களை நன்கு உணர முடியும். பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பவர்களாக நாம் அனைவரும் மாற வேண்டும் என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.